விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 17 செவ்வாய்க்கிழமை (01.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 194

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அரசு தடுத்தாலும் விசாரணை நடக்கும்

## ஐ.நா விசாரணைக் குழு அறிவிப்பு

(ஜெனிவா) இலங்கை மீதான சர்வதேச விசாரணையை நடத்தவுள்ள ஐ.நா. விசாரணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளும் மக்களை அரசாங்கம் தடுக்க முயன்றாலும் தமது விசாரணைகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படும் என்று அந்த விசாரணைக் குழுவின் வல்லுநர்களில் ஒருவரான அஸ்மா ஜெஹாங்கிர் தெரிவித்துள்ளார்.



மக்களை எதேச்சாதிகாரமாக தடுக்க முயல்வது அரசாங்கத்துக்கே பாதகமாக அமையும் என்றும் அஸ்மா ஜெஹாங்கிர் பிபிசி ஊடகத்திற்கு அளித்துள்ள பிரத்தியேக செவ்வியில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கமுடியாது என்று தீர்மானம் எடுத்துள்ள இலங்கை அரசாங்கம், அந்த விசாரணைக் குழுவுடன் தொடர்புகொள்பவர்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அண்மையில் அறிவித்திருந்தது. இந்த சூழ்நிலையில், இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தவுள்ள விசாரணைக் குழுவை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கடந்த வாரம் அறிவித்தது. 20ஆம் பக்கம் பார்க்க....

## பயங்கரவாதமே பாரிய பிரச்சினை

(கொழும்பு)

அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழித்து, சமாதானம் மற்றும் ஸ்திரன்மையை ஏற்படுத்தியது இலங்கக்கு மட்டுமல்ல தெற்காசிய நாடுநக்கும் நன்மையாகும் என அமைச்பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பற்றி அறில் மற்றும் சுற்றுச்சூழல் தொடர நேற்று கொழும்பில் இடம்பெற்ற த்தரங்கில் 20ஆம் பக்கம் பார்க்க....

## ந்திய மீனவர்கள் பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் கைதுயப்பட்ட இந்திய மீனவர்கள் 11 நம் நேற்று விடுதலை செய்யப்ள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து நுழைந்து மீன்பிடித்தனர் என்ற றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப் வைத்து 20ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா.விசாரணை குறித்து மகிந்த தலைமையில் ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்றக் குழுவின் முக்கிய கூட்டம் நேற்று திங்கட்கிழமை பெந்தோட்டையில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனதவுரிமை சட்டமீறல்கள் தொடர்பில் ஐ.நாவின் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் பெந்தோட்டையில் உள்ள நட்சத்திர விடுதியல் நடைபெறறுள்ளது. ஐ.நா விசாரணைக் குழு தொடர்பாக அரசாங்கம் முன்மொழிந்துள்ள செயற்திட்டம் குறித்து விவாதிக்கும் நோக்குடனேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டுள் 19ஆம் பக்கம் பார்க்க....

## கடற்படைக்கு புதிய தளபதி



(கொழும்பு)

இலங்கை கடற்படையின் புதியதளபதியாக வைஸ்அட்மிரல்ஜயந்த பெரேரா இன்று செவ்வாய்க்கிழமை பதவியேறகவுள்ளார். 20ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணையை முழுமையாக வரவேற்கிறோம்

### த.தே.கூட்டமைப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசின் மீதான சர்வதேச விசாரணையை முழுமனதார வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு 5 வருடங்கள் நிறைவடைந்துள்ள போதும் சர்வதேச விசாரணைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீர்வேலியிலுள்ள பணிமனையில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம் பெற்ற போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதி 20ஆம் பக்கம் பார்க்க....

## எமது நிலத்தில் பயிர் செய்ய முடியாது; இராணுவத்தினர் தடையாக உள்ளனர்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(முல்லைத்தீவு)

இராணுவம் எமது நிலத்தில் நிலைகொண்டு இருப்பதனால் நாம் எமது நிலத்தில் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவத்தார்.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மகிந்தோதய தொழில்நுட்பப் பீடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று மு.ப 9 மணியளவில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்று மகிந்தோதய தொழில்நுட்ப பீட அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டுள்ளேன். எனவே நல்லதும் கெட்டதும் ஒரே பிரதேசத்தில் நடந்தேறி வருவதை நான் காண்கின்றேன்.

நாங்கள் அரச சார்பான கட்சியைச் சேர்ந்திருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாங்கள் யாவரும் வடமாகாண மக்களின், அவர்களின் வளங்களில் அக்கறை கொண்டவர்கள் என்பதை மறக்கக கூடாது. அவர்களையும் அவர்களின் வளங்களையும் பாதுகாப்பது எங்கள் யாவரதும் கடமை.

உதாரணத்திற்கு மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில பூநகரியருகே 20ஆம் பக்கம் பார்க்க....

## இரத்மலானை பள்ளிவாசலை தீக்கிரையாக்க முயற்சி!

(கொழும்பு)

இரத்மலானை கந்தவல வீதியிலுள்ள தாளயம் பாவா ஜும்மா பள்ளிவாசலை தீக்கிரையாக்க இனவாதிகள் சிலர் முயற்சி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பள்ளிவாசலின் வாயில் கதவருகில் பழைய ஆடைகளில் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டுத் தீ மூட்டப்பட்டுள்ளது.

பள்ளிவாசலில் தீப்பிழம்பு கிளம்புவதையும் புகை வருவதையும் கண்ட அப்பகுதி மக்கள், உடனடியாக அங்கு விரைந்து சென்று தீயை நீர் ஊற்றி அணைத்து பெரும் அனர்த்தத்தை தடுத்துள்ளதாக ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

இதனால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

67 வருடமாக இரத்மலானை உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து வரும் இப்பள்ளிவாசலில் இதுவரை காலமும் எந்தவொரு அசம்பாவிதமும் இடம்பெற 20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கான புதிய ஆலயமொன்று ஆகம விதிகளின்படி நிர்மாணிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இதன்படி யாழ்.இந்து மகளிர் வீதியில் (முன்னைய ஆலயத்திற்கு அருகாமை) புதிதாக கொள்வனவு செய்யபட்ட காணியில் புதுப் பொலிவுடன் அமைக்கப்படவுள்ள ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையான சுபநேரத்தில் நடத்தப்பட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அந்தண சிவாச்சாரியர்களின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் ஆலய அடியார்கள் அனைவரும் பங்கு கொண்டு பயனடையுமாறு பரிபாலனசபைத் தலைவர் க.தபோதரன் கேட்டுக்கொண்டுள்ளார். (செ)

## தரம் ஒன்று அனுமதி 4 ஆம் திகதி முடிவு

(யாழ்ப்பாணம்)

அரச பாடசாலைகளில் 2015 ஆம் ஆண்டில் தரம் 1 இற்கு அனுமதி கோருவதற்கான விண்ணப்பங்களை அனுப்பும் இறுதித் திகதி எதிர்வரும் 4 ஆம் திகதியாகும்.

அரச சுற்று நிருபத்திற்கு அமைவாக விண்ணப்ப படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். (செ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி அருள் மிகு ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இதற்கமைய எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கத்துடன் மஹோற்சவம் நிறைவு பெற உள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (செ)

## மின்மானியில் காந்தம் பொருத்தியவர் கைது

(கொழும்பு)

மின் கட்டணத்தை குறைக்கும் வகையில் சட்டவிரோதமான முறையில் மின்சார சபையினால் பொருத்தபட்ட மின் மானியில் காநத்தை பொருத்திய கடை உரிமையாளர் ஒருவரை கைது செய்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா மின்சாரசபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரிலுள்ள கடையொன்றில் மின் கட்டணத்தை குறைப்பதற்காக காந்தத்தை பயன்படுத்தி மின்மானியின் வேகத்தை குறைக்கும் வகையில் சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தை பயன்படுத்துவதாக தெரிய வந்தது.

இதனையடுத்து கடந்த 29 ஆம் திகதி மஸ்கெலியா பொலிஸாருடன் இணைந்து சோதனையிட்ட போதே இச் சம்பவம் உறுதிப் படுத்தபட்டதாகவும் மேற்படி கடை உரிமை யாளரை கைது செய்து விசாரணைக்குட்படுத்துவதாகவும் மஸ்கெலியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-11)

## சார்க் வலய நாடுகளுக்காக செய்ம்மதியை உருவாக்குங்கள்

(சென்னை)

சார்க் நாடுகளுக்காக செய்ம்மதி ஒன்றை விரைவில் உருவாக்குமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இந்திய விஞ்ஞானிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

PSLV C-23 என்ற ஏவுகணையை விண்ணுக்கு ஏவுவதற்காக ஆந்திராவின் ஸ்ரீ ஹரிகோட்டாவில் நடைபெற்ற வைபவத்தில் நேற்று முற்பகல் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் மோடி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

05 செய்ம்மதிகள் அடங்கிய ஏவுகணை நேற்று முற்பகல் 9.52 அளவில் விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸ், ஜேர்மன், கனடா மற்றும் சிங்கப்பூர் நாடுகளைச் சேர்ந்த செய்ம்மதிகளே விண்ணுக்கு ஏவப்பட்டுள்ளன.

ஏவுகணை விண்ணுக்கு ஏவப்பட்டதன் பின்னர் கருத்து வெளியிட்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி, தெற்காசிய வலய ஒத்துழைப்பு சங்கத்திற்காக ஏவுகணை ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் உருவாக்க வேண்டுமென அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை சார்க் வலய நாடுகளுக்கு இந்தியா வழங்கும் மிகச் சிறந்த பரிசு எனவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். (செ-11)

## வைத்தியசாலையில் இருந்து கைதி நேற்றுத் தப்பியோட்டம்

(கொழும்பு)

கொழும்பு, வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சிறைக்கைதியொருவர் பாதுகாவலில் இருந்து நேற்று திங்கட்கிழமை காலை தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளையைச் சேர்ந்த 29 வயதுடைய சிறைக்கைதியே இவ்வாறு தப்பியோடியவராவார்.

இவர் 1.5 கிலோ கிராம் ஹெரோயின் வைத்திருந்ததாக கூறப்படும் குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்.

மேலும் தப்பிச் சென்ற சிறைக் கைதியின் வலது கையில் பச்சை குத்தியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கைதி தொடர்பான தகவல்கள் பொதுமக்களுக்கு தெரியவருமாயின் 011-2957197 என்ற இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-11)


## 45ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர் சத்தியானந்தம் (றஞ்சன்) பதுஷன் (பதுக்குட்டி)

ஆண்டவன் படைப்பு 27.04.1999

அதியமய அழிவு 18.05.2014

தரணியிலே வந்துதித்த எம் பதுக்குட்டி
பக்கத்தில் நீயிருந்து – பல கதைகள்
சொல்வதுபோல் பார்க்கும் இடமெல்லாம்
பாசமுகம் தெரியுதடா. சிறகொடிந்த
பறவைபோல் கலங்குகின்றோம் நாம்.
இங்கு நாற்பத்து ஐந்து நாள் ஆனதோ.
இன்று மாறாதடா பதுக்குட்டி எம்மை
விட்டு உம் நினைவுகள்

கடந்த 18.05.2014 அன்று இறைபதம் அடைந்த பதுஷன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று 01.07.2014 (செவ்வாய்க் கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(சி-7788)

தகவல் :
குடும்பத்தினர்.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532


## வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ் நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிற்றூர்தி வண்டியொன்றுடன் மோட்டார் சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தின் போது மோட்டார் சைககிளை செலுத்தி வந்த மல்லாகத்தினைச் சேர்ந்த வி.சுதாகரன் (வயது 32) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக சுன்னாகம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-11)


## வேலைவாய்ப்பு {யாழ்ப்பாணம் வவுனியா/கிளிநொச்சி

நீங்கள் எதிர்பார்ப்பது கௌரவமான நிரந்தர தொழிலா? உங்கள் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய மாதாந்தம் ரூபா 60030.00 உழைத்து எதிர்கால வாழ்வை சிறப்பாக அமைத்துக்கொள்ள அருமையான தொழில்வாய்ப்பு.

உலகளாவிய ரீதியில் கடந்த 34 வருடங்களுக்கு மேலாக இயங்கும் நிறுவனத்திற்கு அதன் இலங்கையின் யாழ்ப்பாணம்/வவுனியா/கிளிநொச்சி கிளைகளுக்கு, சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ள/அனுபவமுள்ள பயிற்சிபெற விரும்பும் பாடசாலையைவிட்டு விலகியவர்களும், நிரந்தர (தொழில்) வருமானத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் 18 – 35 வயதுக்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணம் : 0777274795/0215686466
வவுனியா/கிளி: 0775013502/0244907449
73,St Annes Church Road,Chundikuly,Jaffna.



## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

01.07.2014 முதல் 07.07.2014 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்மைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இ[illegible]

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(c-7773)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள் - அன்பளிப்பு பொருட்கள் - உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(c-7765)



## வாழ்த்துகின்றோம்

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசன் ஆலயத்திற்கு மெய்யடியார்களின் நலன்கருதி பொது நோக்கோடு இளையதம்பி முத்துலிங்கம் (செட்டியார்) குடும்பம் சார்பாக திருமதி கருணாரூபா அவர்களால் 30.06.2014 (திங்கட்கிழமை) அன்று அன்னதான மண்டபம் அன்பளிப்பு செய்யப்பட்டது. இவர்களது நற்பணி தொடரவும், இவர்கள் எம் பெருமான் ஸ்ரீ கதிரேசன் ஆசி பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
நா.கோபிகிருஸ்ணா, ந.கபில்ராம், த.றங்கீஸ்

(6995)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை அரசுக்கு சுருக்குக்கயிறு

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேச விசாரணை சுருக்குக்கயிராகவே மாறும் எனவும் மூன்று இலட்சத்து 40 ஆயிரம் பேரின் சமாதி மீது இருந்துதான் நாம் பேசுகின்றோம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் அமரர் திருமதி கெங்காதேவி பாலச்சந்திரன் நினைவாக பெண்களுக்கான போட்டிகளை நடத்தியது.

போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழினத்துக்கு காலப்பெரும் தலைவனை தந்த இந்த மண்ணில் ஒரு விளையாட்டு நிகழ்வில் கலந்து கொள்வதை நான் மிகுந்த மதிப்பிற்கு உரியதாக கருதுகிறேன்.

வரலாறுகளை தந்த ஊரில் பிறந்த நீங்களும் அதன் உணர்வுத் தொடர்ச்சியானவர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

எமது மகிழ்வுக்காக, விடியலுக்காக நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இளம் கனவுகளையும் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களையும் மண்ணுள் விதைத்துவிட்டு அந்த சமாதிகளின் மேல் இருந்துதான் நாம் பேசுகின்றோம், விளையாடுகின்றோம்.

இன்றைக்கு இந்த மண்ணில் தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கம் அரங்கேற்றிய கொடுமைகளுக்கு பிரதிபலனாக சர்வதேசம் விசாரணையை கொண்டு வந்திருக்கின்றது.

அதில் இருந்து தப்பித்துக் கொள்ள இலங்கை அரசாங்கம் செய்கின்ற பிரயத்தனங்களை பார்க்கின்றீர்கள்.

இது அவர்களுக்கு சுருக்கு கயிறாகவே மாறும். அண்மையில் முஸ்லிம் சகோதரர்கள் மீது மிக கொடூரமான மானுட குலத்துக்கு எதிராக மானுடத்து எதிராக இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் இனவாத சக்திகள் அரங்கேற்றியவை வெட்கத்துக்கு உரியவையாக உலகத்தால் பார்க்கப்படுகின்றது.

எனவே, ஒரு சர்வாதிகார அரசு எப்படி இருக்குமோ இன்று அதை இலங்கை அரசாங்கம் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது. இந்த மண்ணில் மக்களை எந்த அடிமைகளாக வைத்திருக்க முடியுமோ அந்த அளவுக்கு முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாண மண்ணில் இன்று வாள் வெட்டுக்களும், குழு மோதல்களும, கொலைகளும், தற்கொலைகளும் மலிந்திருக்கின்றன. இவை முன்பு இருந்ததில்லை. இவை திட்டமிட்டு உருவாக்கப்பட்டு எமது மண் சீரழிவதற்கு வழி செய்யப்படுகின்றது. இதில் நாம் விலகியிருக்க வேண்டும்.

தீய சக்திகளில் இருந்தும் போதை பொருள் பாவனையில் இருந்தும் நாம் விலகியிருக்க வேண்டும். ஆகவே இத்தகைய சூழலில் இளைய சமுதாயத்தில் இத்தகைய மதிக்கத் தக்க விளையாட்டுக்கழகங்களின் செயற்பாடுகளை நிச்சயம் பாராட்டாமல் இருக்க முடியாது. உங்கள் சமூக நல்லெண்ண முயற்சிகள் தொடர ட்டும். நாமும் அதற்கு துணை இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# சைபர் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## கணனி அவசர தயார்ப்பிரிவு தகவல்

இலங்கையில் சைபர் குற்றச் செயல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணனி அவசர தயார்ப் பிரிவு இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது. இவ்வாண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் 900 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு முழுவதிலுமே மொத்தமாக ஆயிரத்து 200 முறைப்பாடுகள் மட்டுமே பதிவாகியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

அண்மைக் காலமாக இணையக் குற்றச்செயல்கள், சைபர் குற்றச் செயல்கள் வெகுவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. சமூக வலையமைப்பு மற்றும் மின்னஞ்சல் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காதல் விவகாரங்களினால் ஏற்படும் முரண்பாடுகளே அதிகளவில் இணையக் குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கான ஏதுவாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காதல் உறவில் ஏற்படும் விரிசல் காரணமாக காதலர், அந்தரங்க விடயங்களை இணையத்தில் பிரசாரம் செய்யும் கலாசாரம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (2)

# தீவிரவாத ஊடுருவலை தடுக்க தனுஷ் கோடியில் அரண்கள் அமைப்பு

(கொழும்பு)

இலங்கை ஊடாக இந்தியாவுக்குள் தீவிரவாதிகளின் ஊடுருவல் மற்றும் கடத்தல்களை தடுப்பதற்காக தொடர்ந்தும் கரையோர பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் இது தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று தமிழகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கைக்கு ஊடாக தென்னிந்தியாவுக்குள் ஊடுருவும் தீவிரவாதிகள் மற்றும் கடத்தல்காரர்களை தடுப்பதற்காக தீவிரமான கண்காணிப்புகளை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இந்தியாவின் சகல பாதுகாப்பு பிரிவுகள் மத்தியிலும் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்வது என்று இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி தனுஷ்கோடியில் உள்ள பாலம் என்ற இடத்தில் நான்கு பொலிஸ் அரண்களை அமைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை, அரிச்சல்முனை பகுதியில் கடந்த சில நாட்களில் மாத்திரம் கடத்தல்கள் தொடர்பில் 15 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கரையோர பாதுகாப்பு பிரிவினர், கியூ பிரிவினர், புலனாய்வுப் பிரிவினர், கரையோர காவல்துறையினர், வனத்துறையினர் உட்பட பல அதிகாரிகளும் பங்குபற்றினர். (2)

# அரசியல் சூழ்நிலையை மாற்றி அமைக்க ஒத்துழைக்க தயார்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்ற முன்னாள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமது தந்தையான எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவினால் ஸ்தாபிக்கப்பட்ட கட்சியை மீட்டெடுக்கப் போவதாக சந்திரிகா, பலம் பொருந்திய அமைச்சர் ஒருவரிடம் குறிப்பிட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சில மாதங்களாக லண்டனில் வாழ்ந்து வந்த சந்திரிகா அண்மையில் இலங்கைக்கு திரும்பியிருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடமையாற்றி வருகின்றார்.

பொதுவான ஓர் கொள்கையின் அடிப்படையில் தற்போதைய அரசியல் சூழ்நிலையை மாற்றியமைக்க ஒத்துழைப்பு வழங்கத் தயார் என சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவிற்கு ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் ஆதரவளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

# உயரழுத்த மின்கம்பம் முறிந்ததால் தீவுப்பகுதிக்கு மின்சாரம் தடை

காரைநகர்- பொன்னாலை பிரதான மின்மார்க்கத்தில் அமைந்துள்ள உயர் அழுத்த மின்கம்பங்கள் முறிந்து வீழ்ந்ததில் தீவுப் பகுதி இருளில் மூழ்கியது. நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் வீசிய கடும் காற்றினால் காரைநகர் பொன்னாலைப் பகுதியில் அமைந்திருந்த உயர் அழுத்த மின்கம்பங்கள் மூன்று முறிந்து வீழ்ந்து மின்சாரக் கம்பிகளும் அறுந்தன.

இதனால் காரைநகர் , ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு போன்ற பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன. யாழ். ஊர்காவற்றுறை பிரதான வீதியில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வரும் இந்த வேளையில் இப்பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதால் வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

தடைப்பட்டுள்ள மின்சாரத்தை மீள வழங்குவதற்கான துரித நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையினர் ஈடுபட்டிருந்தனர். (ஏ)

# கும்பாபிஷேகம்

(சுரணவாய்)

வடமராட்சி மேலைப் புலோலி திருநாவலூர் முடிக்கொற்றாவத்தை திருள்வருள் மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோவில் அஷ்ட பந்தன பஞ்ச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதம குரு சிவஸ்ரீ வேதாரணியக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (2-60)

# இராசி பலன்

01.07.2014

(ஆனி 17, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிவரை

சதுர்த்தி முன்னிரவு 8.59 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 2.08 மணிவரை

இராகுகாலம் 2.56- 4.26 மணிவரை

சுபநேரம்- 10.26-11.56 மணிவரை

சதுர்த்தி விரதம்

வளவன்

**மேடம்:** செய்தொழிலில் மேன்மையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**இடபம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, பிரயாண சுகமுண்டு.

**மிதுனம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், சகோதர வழியில் நன்மையுண்டு.

**கடகம்:** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கை உண்டு.

**சிம்மம்:** இறைவழிபாட்டால் இனிமை காணவேண்டிய நாள்," குடும்பச் சுமை கூடும், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** சுப விரயங்கள் கூடும் நாள், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங் களால் பலனுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், தொழில் முன்னேற்ற பாதையை நோக்கிச் செல்லும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்,

**விருச்சிகம்:** சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் ஈடேறும்.

**தனுசு:** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும், ஆன்றோர் சந்திப்புண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உதாசீனப் படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும்.

**கும்பம்:** அபூர்வ சந்திப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு. வாகன சுகமுண்டு.

**மீனம்:** சச்சரவை விட்டு சாததித்துக் காட்டுவீர்கள், காணாமற் போன பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கலாம், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை புற்றுநோய் பிரிவிற்கு குடிநீர் வசதி

## நாவலர் நற்பணி மன்றம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் நாவலர் நற்பணி மன்ற உதவியுடன் தெல்லிப்பழை புற்றுநோய் பிரிவுக்கு குடிநீர் வசதி ஆரம்பித்தல் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு புற்றுநோய் பிரிவு கேட்போர் கூடத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் மு.உமா சங்கர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் மற்றும் வருமானவரி ஆலோசகர் ந.கருணை ஆனந்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது ஆசியுரையை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார்.

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு வருமான வரி ஆலோசகர் கருணை ஆனந்தன் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் குடிநீர் வசதியினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கு குடிநீர் வசதியின்மை காணப்பட்டமையையடுத்தே இதற்கான ஏற்பாடுகளை மேற்படி அறப்பணி மன்றத்தினூடாக வழங்கியுள்ளார்.

இதற்கமைய குடிநீர் திட்டம் ஆரம்பிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-2)

நன்றி-மிரர்




# கஞ்சா போதைப்பொருள் பாவனை யாழ்.மாவட்டத்தில் அதிகரிப்பு

## பொலிஸாரால் சுட்டிக்காட்டு

யாழ்.மாவட்டத்தில் கஞ்சா போதைப் பொருள் பாவனை அதிகரித்து காணப்படுவதாக யாழ்.பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதத்தில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் அளவினை மேற்கோள் காட்டியே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

எனினும் இக் கஞ்சா விநியோகஸ்தர்களினை கைது செய்வதற்கு பொலிஸார் தரப்பில் விசேட குழுவொன்று இயங்கி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில கரையோரப்பகுதிகளினூடாக இந்தியாவிலிருந்து கஞ்சா கடத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக மாதகல் மற்றும் குருநகர் கடற்பரப்புக்களினூடாக இந்தியாவிலிருந்து பெறுமதி வாய்ந்த கஞ்சா கடத்தப்பட்டு வருகின்றது.

இந்தியாவிலிருந்து படகுகளில் இந்திய இலங்கை எல்லையருகே வந்து இந்த போதைப் பொருட்களினை இலங்கையர்களினூடாக கைமாற்றி விற்பனையில் ஈடுபடுத்துகின்றனர்.

இக் கஞ்சா கடத்தல்களிற்கு இலங்கையிலுள்ள சில முக்கியஸ்தர்கள் பின்னணியில் உள்ளதாக புலனாய்வு தகவல்கள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு இக் கடத்தல்களின் மூலத்தினையும் பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர்.

கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியுடைய கஞ்சாவினை கடலில் சாதாரணமாக தொழிலில் ஈடுபடுகின்ற மீனவனால் கொள்வனவு செய்ய முடியாது.

ஆகவே இதன் பின்ணனியில் கட்டாயம் பண முதலைகள் இருந்தே தீருவர். யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதத்தில் மட்டும் 150 கிலோகிராம் நிறையுடைய கஞ்சா பகுதி பகுதியாக பல இடங்களில் கைப்பற்றப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (2-4)

# கடைக்கு வெளியே காட்சிப்படுத்தப்படும் பொருட்கள் அகற்றப்பட வேண்டும்

## வடமராட்சி பிரதேச சபையில் தீர்மானம்

நெல்லியடி நகரப்பகுதியில் உள்ள வர்த்தகர்கள் தமது கடைகளில் உள்ள பொருட் களை கடைக்கு வெளியே வைத்து காட்சிப்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் நீண்ட காலமாக வர்த்தகர்கள் தமது கடைக்குரிய பொருட்களை வெளியில் காட்சிப்படுத்துவது மட்டுமல்லாது பரவி வைப்பதையும் காணக்கூடியதாகவுள்ளதாக பாதசாரிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாதசாரிகள் மட்டுமல்லாது நகரப் பகுதிகளுக்குள் வரும் வாகனங்களும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி தெற்கு பிரதேச சபை மண்டபத்தில் பிரதேசசபை செயலாளர் தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்குறித்த தீர்மானத்தினை வடமராட்சி நகர பாதுகாப்பு குழுவிற்கு பிரதேச சபை ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-60)




# 782 வழித்தட பேருந்து சீரான சேவை வழங்குவதில்லை

## காரைநகர் பயணிகள் விசனம்

காரைநகரில் இருந்து யாழ். நோக்கி சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான 782 வழித்தட அரச பேருந்து சீரான சேவை வழங்குவதில்லையென அப் பிரதேச வாசிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக பிற்பகல் ஒரு மணியிலிருந்து 4 மணிவரை குறித்த பேருந்து சேவையில் ஈடுபடுவதில்லை என பயணிகளால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்கின்ற பயணிகள் அரச பேருந்து சேவைக்காக மாதாந்த சிட்டை பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் சீரான போக்குவரத்து இன்மையால் அவர்கள் தனியார் பேருந்து சேவையினை நாடிச் செல்வதால் பெரும் நட்டத்தை எதிர் கொள்கின்றனர்.

தனியார் பேருந்துகளில் பயணிப்பதால் நேரம் தாழ்த்தியே சொந்த இடங்களைச் சென்றடைய வேண்டிய நிலை ஏற்படுவதாக அவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான பிரச்சினை ஒரு வார காலமாக தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதாக பயணிப்போரால் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக காரைநகர் பேருந்து சாலைக்கு பயணிகளால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் காரை நகர் பேருந்து சாலையில் இருந்து நிரந்தர பேருந்து சாரதி நடத்துனர் டீசல் இல்லையென பல காரணங்கள் பயணிகளிடம் கூறப்பட்டது.

எனவே காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிப்பதற்கு சீரான அரசு போக்குவரத்து சேவையினை ஈடுபடுத்துமாறு காரைநகர் பேருந்து சாலைக்கு பயணிகள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் சிற்றூழியர், தாதியர்கள் பற்றாக்குறை

## பதில் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்.போதனா வைத்திய சாலையில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கையெடுக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பகுதிப் பணிப் பாளர் வைத்தியர் கலாநிதி சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

சிற்றூழியர், தாதியர், பற்றாக்குறையே யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிகம் காணப்படுகின்றதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கட்டடங்கள் அதிகரித்து வைத்திய முறைகளும் அதிகரித்து வருவதோடு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயார்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இதனால் வைத்தியசாலையைப் பராமரிக்கும் சிற்றூழியர்களும் நோயாளர்களினை பராமரிக்கும் தாதியர் எண்ணிக்கையிலும் நாளாந்தம் அதிகரிப்பு தேவைப்படுகின்றது.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் தாதியர்கள், சிற்றூழியர்களின் எண்ணிக்கையில் இரு மடங்கினர் இன்னமும் தேவையாகவுள்ளனர்.

தாதியர்கள், சிற்றூழியர்களின் ஆட்பற்றாக்குறையினால் நோயாளர்களிற்கு வைத்தியசாலையில் முழுமையாக சேவை வழங்கப்படுவதில்லை.

ஆகவே யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்களினை பணிக்கமர்த்துவதற்கு ஆட்சேர்ப்பு செய்யுமாறு பதில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதும் யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர், சிற்றூழியர்கள், வைத்தியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கையெடுக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)



நல்லூர் ஆடிய பாதம் அருள் மிகு இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு இடம் பெற்ற சைவ அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது ஆலய மஹோற்சவ குரு மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் மா.வேதநாதனால் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் கலை நிகழ்வில் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான இந்திய மீனவர்கள் 17 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 17 பேரையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்றைய தினம் உத்தரவிட்டார்.

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான மீனவரை விசேடமாக பராமரிக்குமாறும் இம் மீனவர்களின் வலை மற்றும் படகுகளை பாதுகாக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

3 படகுகளில் வந்த இம்மீனவர்களை கடந்த சனிக்கிழமை இரவு கைது செய்த கடற்படையினர் தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழல் திணைக்கள அதிகாரிகளிடம் இம்மீனவர்களை ஒப்படைத்த நிலையில் இவர்கள் தலைமன்னார் வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது மீனவர் ஒருவருக்கு எச்.ஐ.வி.தொற்று இருப்பது தெரிய வந்துள்ளது.

நீதிமன்ற உத்தரவை அடுத்து அனைவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். (அ-2)

# அழகியற் கண்காட்சி

யாழ். வண் நாவலர் மகா வித்தியாலயத்தின் அழகியல் கண்காட்சி. அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் இன்று மு.ப. 9.30 மணிக்கு பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் விருந்தினர்களாக யாழ். வலய சித்திரபாட ஆசிரிய ஆலோசகர் து.துஷ்யந்தன். சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி. சா. விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ)


## நிரந்தர வேலைவாய்ப்பு

நீங்கள் தேடுவது உயர் ஊதியத்துடனான பாதுகாப்பு கூடிய நிரந்தர தொழில் வாய்ப்பினையா? இன்றே அழையுங்கள்.
கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான பால்மா/ கிளவுஸ்/ சொக்லெட்/ யோகட்/ காமென்ட்/ கோடியல்/ பிளாஸ்டிக்/ Paint/Printing போன்றவற்றில் உற்பத்தி , லேபல். பொதியிடல். களஞ்சியப்பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண். பெண் தேவை.
சம்பளம் 18000/- 26000/- 36000/-
(வருகை தரும் நாளிலே வேலைக்கு செல்லலாம்)
C7785
தொடர்புக்கு:- 077 6838231



## UNIVERSITY OF JAFFNA - SRILANKA

**Vacancies - Faculty of Arts**

University of Jaffna will entertain applications up to 11th July 2014 from suitably qualified persons for the under mentioned post.

**Temporary Lecturer / Temporary Tutor**

Archaelogy / Christian Civilization / Drama & Theatre Arts / Economics/ English Literature / Fine Arts / Geography / Hindu Civilization / Hindu Philosophy / History / Law / Linguistics /Media Studies / Planning /Philosophy /Political Science / Psychology/ Sanskrit / Sociology / Tamil / Translation Studies

(சி-7756) Registrar



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 22 செவ் 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Dip. in IT / சொந்த வியாபாரம் (UK – Student Visa)
எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்
தொ.இ: B/1563

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: 43 சூரி, செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில் A/L / அரச தொழில்
தொ.இ: B/1566

பிறப்பு: 1983 கிறிஸ்தவம் (RC)
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 33.75 செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பல் வைத்தியர் / B.D.S
தொ.இ: B/1567

பிறப்பு: 1984 கிறிஸ்தவம் (RC)
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 51.75 செவ் 2 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: வைத்தியர் / MBBS
தொ.இ: B/1568

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 40 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L, HNDE
தொ.இ: G/2204

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 62.25 செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, Pharmacist Course / கிராம சேவையாளர்
தொ.இ: G/2206


பிறப்பு: 1977 கிறிஸ்தவம் (NRC)
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 46 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வேறு மதத்தவர்களும் பார்க்கலாம்
தொ.இ: G/2209

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 36
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA, CIMA / கணக்காளர் (UK – Work Permit)
தொ.இ: G/2210

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.




உங்கள் ஆலய திருவிழாக்களில்...
அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர். எஸ். எஸ். சர்மா (குருஜீ) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி.
(6023)
T.P.0777064247





இணுவில் கந்தசுவாமி கோவில்

உத்தமோ உத்தம (33 குண்டம்) மஹா கும்பாபிஷேக பெருவிழா (04.07.2014) வெள்ளிக்கிழமை காலை 8.40 முதல் 10.27 வரை

எண்ணெய்க்காப்பு இன்று காலை 8.30 தொடக்கம் நாளை புதன்கிழமை மாலை 4.00 மணிவரை நடைபெறும்.

3 ஆம் திகதி காலை இத்திருவிழாவை சிறப்பிப்பதற்காக கதிர்காமப் பெருவிழா நிகழ்வில் பங்கு பற்றும் இரண்டு யானைகள் ஆலயத்துக்கு அழைத்து வரப்படவுள்ளன. அன்றைய தினம் இங்கு நடைபெறும் மஹா யாகத்தை சிறப்பிப்பதற்காக அனுராதபுரத்தில் இருந்து இரண்டு வெள்ளைக் குதிரைகள் அழைத்து வரப்படவுள்ளன.

தேமதுரம்
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை மற்றும் போட்டோ கொப்பி சேவை. கே.கே.எஸ். வீதி, இணுவில் சந்தி.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்பதாஸ் பந்தல் சேவை
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் (துறை வீதி சந்தி)

விக்னா ஆசனப்பதிவகம் பாடசாலை சேவை
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு இணுவில்.

(சி -7784)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானத்தை பேணிக் கொண்டு தொழில்நுட்பத்தில் முன்னேறுவோம்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர்கள் போர்க் காலத்தில் தொழில்நுட்ப திறனோடும் தொழில் வல்லமையோடும் வாழ்ந்தனர் என வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை மஹிந்தோதய தொழில்நுட்பப் பீட அடிக்கல் நாட்டு விழா நேற்று நண்பகல் 12 மணியளவில் கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முதலாம் இடத்தையும், சிங்கள, தமிழ்மொழிப் பாடசாலைகளுள் 5ஆவது இடத்தையும் உங்கள் கல்லூரி பெற்றுள்ளதையும் அவதானிக்கின்றேன்.

மேலும் உங்கள் கல்லூரி உயர் நிலையை அடைய வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

கல்விப் பொதுத் தராதரம் உயர் மட்ட நிலையில் தொழில்நுட்பம் ஒரு பாடமாக ஆக்கப்படுவதைத் தொடர்ந்து அதனைக் கல்லூரிகளில் செவ்வனே பயிற்றுவிக்க ஏதுவாகவே தொழில்நுட்ப பீடங்கள் நிறுவப்பட்டன.

Mechanical Engineering Technology, Civil Engineering Technology, Power and electrical Technology, Bio System Technology போன்ற தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பிக்கவும் அதற்கான மாணவ அறைக் கட்டடங்களையும் உரிய கருவிகளையும் மற்றும் வகுப்பறை அனுசரணைகளையும் வழங்குவதே இந்தத் திட்டத்தின் குறிக்கோள். 2013 தொடக்கம் தேசிய மட்டத்தில் 250 பாடசாலைகளில் உயர்தர மட்ட தொழில்நுட்ப ஒழுங்குமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அந்த 250 னுள் உங்கள் கல்லூரியும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மாணவ மாணவியர் வருங்காலத்தில் மிக முக்கிய ஒரு பங்கை வகிக்க இருக்கிறார்கள் என்பதை மாணவிகளான நீங்கள் மறந்து விடக்கூடாது.

தொழில்நுட்பக் கல்வியானது சகல தொழில்கள் பற்றியும் அல்லது குறிப்பிட்ட தொழில்கள் பற்றிய வழிமுறைகளை அவை சார்ந்த கல்வியைப் பெறுவதாகும்.

அறநெறிகள், சமய நோக்குகள், ஆன்மீக மேம்பாடு போன்றவை அவர்கள் உலகாயத வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவை. அவசியமில்லை என்று நினைத்து இயல்பியல் உலகையே கதி என்று வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால் வெகு விரைவில் பொருளாதார ரீதியாகப் பல பின்னடைவுகளை உலகத்தின் உயர்நிலை நாடுகள், வல்லரசுகள் ஆகியன எதிர்நோக்கவுள்ளன என்று எதிர்வுகள் கூறுகின்றன.

வருங்காலம் எத்தகையதாக அமையும் என்பதைக் கூற முடியாது. அதனால் நாங்கள் எமது மதரீதியான, அறரீதியான, மனிதாபிமான ரீதியான பின்னணியைப் பேணிக் கொண்டு தொழில்நுட்ப ரீதியாக முன்னேறுவதே உசிதம் என்று நினைக்கிறேன்.

போர்க் காலத்தில் தொழில் நுட்பத் திறனோடு எங்கள் இளைஞர் யுவதிகளால் கட்டப்பட்டிருந்த பலதையும் இன்று நாம் அழித்து விட்டுள்ளோம்.

அத்தனை தொழிற்றிறனும், தொழில் வல்லமையும், பொறுமையும் சேர்ந்து உருவாக்கிய இந்த இயல்பியல் அதிசயங்கள் கண்காணாமற் போயுள்ளன. இதைத் தான் நான் இங்கு கூற வருகின் றேன்.

அதாவது மனிதனின் ஆற்றலானது ஆக்க பூர்வமாகவும் அழிவு பூர்வமாகவும் செயற்படுவதாலேயே இவையெல்லாம் நடக்கின்றன என அவர் தெரிவித்தார். (அ-2-4)

# படகில் 30 பேரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகொன்றில் இருந்து 30 பேரின் சடலங்களை இத்தாலியக் கடற்படையினர் கண்டறிந்துள்ளனர்

சிசிலி மற்றும் வட ஆபிரிக்க கடற்பரப்பிற்கு இடையே நூற்றுக்கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்த படகில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூச்சுத் திணறலை எதிர்நோக்கியிருந்ததாக இத்தாலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த மீன்பிடிப் படகில் 600 பேர் வரை பயணித்துள்ளதுடன் அவர்களில் இருவர் கர்ப்பிணிப் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இவ்வாண்டின் இதுவரையான காலப் பகுதியில் இத்தாலியின் தென்பிராந்தியத்தை 60 ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர் சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 500 |
| தக்காளி | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 |
| கோவா | 140 | 140 | 160 |
| கரட் | 200 | 150 | 200 |
| பூசணி | 100 | 70 | 80 |
| புடோல் | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-130 | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 200 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 120 |
| பயற்றங்காய் | 150 | 150 | 120 |
| லீக்ஸ் | 90 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 240 | 200 |
| போஞ்சி | 180 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 70 | 90 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 60-100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 |

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 61

சர்மிலா சிவராஜா




கோகுல் கோகுலன்



சுபா கீதன்




P.J சீமன்




அற்புதராஜா முகேஷ்ராம்




செல்வா சங்கீவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர இலங்கையை சீரழித்த சக்திகள்



ஐ.நாவின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி தயான் ஜயதிலக்க எழுதிய கட்டுரை சண்டே லீடரில் வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரமாக்கப்படுகிறது.

(தமிழில் :- யோகர்)

முப்பது வருடகாலப் போர் முடிவடைந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையில் மாற்றத்திற்கான காலம் கடந்து இறுதியான கால கட்டம் ஒன்றில் நாம் இப்போது இருக்கிறோமா? அல்லது இரத்தம் சிந்திய முன்னைய படிப்பினைகளுடன் கூடிய யுத்தத்திலிருந்து மீண்டு சமாதான கால கட்டத்திற்குள் பிரவேசித்திருக்கிறோமா? அல்லது நிச்சயமற்ற ஒருவித சமநிலையுடன் கூடியது போன்ற தற்போதைய வாழ்க்கை முறையிலிருந்து மீண்டும் இரத்தமயமான ஒரு இறுதி முடிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோமா? இலங்கையின் கண்ணுக்கெட்டிய எதிர்காலம் "மஹிந்த - மோடி" சமன்பாட்டைப் பொறுத்த விடயமேயாகும்.



இதில் மேற்படி கேள்விக்கான இலக்கை நோக்கிய முடிவொன்றை மேற்கொள்வதற்கு தளமாக இருவிதமான நிலைமைகள் எமது கண்முன்னே விரிகின்றன.

1 ஆவது: ஆரோக்கியமான சர்வதேச உறவுகள்

இலங்கையின் தென்பகுதிச் சிங்கள அமைப்புகளுக்கு தம்மை ஒத்த அடிப்படை மதவாத அரசியல் போக்குடன் கூடிய புதிய மோடி அரச நிர்வாகத்தின் கருத்தியல் மற்றும் அபிவிருத்திகளை கட்டியெழுப்புவதற்கான திறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எனவே, டில்லியுடனான நெருங்கிய மூலோபாய உறவுகளைப் புதுப்பித்து வளர்த்துக் கொள்வதே வடக்கு- கிழக்கு பிரிவினை வாதத்தை தடுத்து நிறுத்துவதற்கு கிடைத்த கடைசி சந்தர்ப்பம் என்பது இலங்கையை உணர்ந்து கொள்ள வைத்துள்ளது.

13 ஆவது திருத்தச்சட்டத்தை மிகச் சுருக்கமான ஒரு காலகட்டத்திற்குள் நிறைவேற்றி முடிப்பதன்மூலம் இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான உறவு நிலை விருத்தியடைவதற்கு ஏதுவாக அமையும்.

கொழும்பானது, "வோஷிங்டன்- லண்டன்- டில்லி'' ஆதிக்கத்தின் இலக்காக இருப்பதற்குப் பதிலாக தற்போது (ஜெனீவாவில் 2009 மே மாதத்தில் நிகழ்ந்த விதமாய்) ''டில்லி- சீன'' இருதரப்பு ஆதிக்கத்தின் கீழ் மீண்டும் வந்துள்ளது.

13 ஆவது திருத்தச்சட்ட விடையத்தில் தனது நம்பகத்தன்மையை இலங்கை நிருபிக் குமானால் 2015 மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா் கூட்டத்தொடரில் இந்தியாவின் பாதுகாப்பு இலங்கைக்கு கிடைக்கும்.

அவ்வாறு கிடைக்குமாயின் அதன் குறிப்பிடத்தக்க பிரச்சினை சமாளிக் கப்படுவதுடன் சர்வதேசத்துடனான அதன் சச்சரவும் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும்.

தனது பதுங்கு குழியிலிருந்து இலங்கை வெளியே வரக்கூடியதாக இருக்குமென்பதுடன் உலக நாடுகளுடன் சுதந்திரமாக செயற்படக் கூடியதாகவும் இருக்கும்.

2 ஆவது: உறவுகளை சீரழித்து அழிவை நோக்கி செலுத்தக் கூடியது

13 ஆவது திருத்தச் சட்டம் குறித்த ஓர் காலவரையறைக்குள் நிறைவேற்றப்படாமல் தொடர்ந்தும் இழுபறிப்படுவதுடன் ஏற்படுத்தப்பட்ட மாகாணசபையையும் இயங்கா நிலைக்கு தள்ளி முடக்கும் மத்திய நிர்வாகச் செயற்பாடுகள் காரணமாக மத்திய - மாகாண அரசுகளுக்குமிடையில் அரசியல் வெற்றிடமொன்று நிலவுகிறது.

இதனால், அதிருப்தி காரணமாக தமிழ் இளைஞர்கள் தலைமையில் சிவில் சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் வன்முறையற்ற எதிர்ப்புப் பேரணிகளுங்கூட அரசினால் முறியடிக்கப்படுகின்றன்.


இதனை தொடர்ந்து 2015 மார்ச்சில் ஜெனீவாவில் இடம்பெறும் "ஐ.நா.ம.உ" சபையில் முன்வைக்கப்படும் கடும் போக்கு தீர்மானமொன்றுக்கு டில்லியும் ஆதரவு அளிக்குமானால் அதுவே இறுதி முடிவிற்கான காலக்கெடுவின் ஆரம்பமாகக் கொள்ளப்படும்.

இலங்கையின் தீவிர தமிழ் விரோதப் போக்கின் காரணமாக அதிருப்தியடையும் தமிழ் நாடு தனது பிரதான எதிர்ப்பு அரசியல் விளையாட்டிற்கே திரும்பும் முயற்சியில் இறங்க, மத்திய அரசுக்கு உள்நாட்டு அழுத்தமும் கூடவே அதிகரித்துச்செல்லும்.

தமிழகத்தின் அமைதியின்மையானது இந்திராகாந்தி பாணியிலான நடவடிக்கைகளுக்கு தூண்டுவதாகவுமிருக்கலாம். பங்களாதேச உருவாக்கத்துடன் அம்மையார் ஏற்கனவே பிராந்தியத்தின் சக்கரவர்த்தினியாக முடிசூடிக்கொண்டவராக இருக்கிறார்.

போதிய சர்வதேச கருத்துக்களின் பின்னணியில் இலங்கையின் வெளிவிவகார வலுவும் மட்டந்தட்டப்பட்டதாகவேயுள்ளது.

இலங்கைத்தீவின் எல்லைகள் ஒருபோதும் பழைய நிலையில் இருக்கப்போவதில்லை.



சிறுபான்மையினருக்கெதிராக வெடித்துக்கிளம்பும் இனச்சுத்திகரிப்புப்படுகொலைகள் காரணமாக வெளிநாட்டுத் தலையீடு ஏற்பட்டு சிங்கள பொம்மை நிர்வாகமொன்று (ரணில் - சந்திரிகா - மங்கள இணை அரசு - தேசியவாதிகளின் அரச இலைக்கொடியுடன் கூடிய) நிறுவப்படுகிறது.

சமாதானத்தில் நம்பிக்கை அற்ற சிங்கள பயங்கரவாத கிளர்ச்சியொன்று பொம்மை அரசுக்கெதிராக ஆரம்பித்து நிரந்தரமான ஒரு சிவில் யுத்தமாக தெற்கில் பரவுகிறது.

இறுதியாக, தலிபான் ஆட்சிக்கு நிகரான சிங்கள - பௌத்த மதவாதப் பயங்கர ஆட்சி நிலவும்.

இதனைத் தொடர்ந்து ஏற்படும் கொஸோவோ இழுபறி போன்ற ஐ.நா. ஆணைக்குட்பட்ட ஆட்சி போன்றதொரு நிலைமைக்குப் பின்னர் இலங்கையின் தமிழ் பெருநிலமான வடக்குடன் கிழக்கின் ஒரு பகுதியும் சுதந்திரம் பெறு வதாய் இருக்கும்.

LLRC கொண்டுவரக்கூடிய மாற்றமொன்றுதான் பிரச்சினையிலிருந்து விடுவிக்கும் நிலையைத் தோற்றுவிக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு அவ்வறிக்கையின் சிபார்சுகளின் விரைவான நிறைவேற்றத்தை விரும்பியிருக்கக் கூடியவர்கள் அதற்குத் தடையாக இருப்பது என்ன என்ற கேள்வியையே எழுப்புவார்கள்.

என்னைப் பொறுத்தமட்டில் ராஜபக்ஷ நிர்வாகத்திலும் எவ்வளவோ தூரம் பழைமைவாய்ந்ததான இந்த தடையானது மிகுந்த அச்சத்திற்குரிய முன்னாள் ஆணைக் குழுவொன்றும் அதனது அறிக்கையுமேயாகும்.

பேய்போல் நிழலாடி அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த அறிக்கையானது சுதந்திர இலங்கையின் வரலாற்றிலேயே ஆகக் கூடுதல் ஆதிக்கம் செலுத்தி ஆட்டிப் படைக்கும் சத்தியாகும்.

மகாவம்சமும் கிறிஸ்தவமும்

யூதர்களின் அடிப்படை வேதமாகிய யூதாவின் உட்சமயப் பிரிவொன்றில் உருவாகி வரையறைக்குள்ளிருந்த யேசுவின் அப்போஸ்தலிக்க அமைப்பையும் அவரது நற்செய்தியையும் வெளி உலகத்துக்கு கொண்டு வந்து அதனை உலக சமுதாயத்திற்கே உரித்தான உலகளாவிய ஒரு சித்தாந்தம் மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான சீர்திருத்த தத்துவமாக அதனை ஆக்கியிருந்தார் புனித போல் அடிகளார்.

கிறிஸ்தவம் செழித்தோங்குவதற்கு யூதர் இனத்தின் கட்டுக்குள் பிரத்தியேக சிந்தனை வட்டம் மற்றும் கொள்கை எல்லைகளையும் கடந்து அது விடுதலை பெற்று வெளியேற வேண்டியதாயிருந்தது.

புனிதபோல் அவர்கள் அங்கு வலிந்த பாத்திரத்தை மஹாவம்ச உரிமையாளர்கள் தமது மட்டில் தலைகீழாகப் புரட்டி விட்டிருந்தனர். அதாவது புத்தருடைய உலகளாவிய சிந்தாந்தத்தை சிறியதொரு தீவினிற்குள் உள்ள ஒரு இனத்துவ மற்றும் மொழிவழிக் குழுமத்திற்கே உரித்தான ஒன்றாக அதனை சுருக்கி மேலும் கூடுதல் குறுகிய நோக்கத்திற்குரியதாக்கிக் கொண்டனர். புனித போல் அடிகளார் கிறிஸ்தவத்தை உயர்நோக்கிலான ஓர் தலைமைத் தத்துவமும் உலகளாவிய ஓர் செயற்றிட்டமுமாக்கியிருக்கையீல், மஹாவம்சம் புத்த சமயத்தினை உலகளாவிய அதன் நிலையிலிருந்து அதனை கீழிறக்கி சிறுமைப்படுத்தியதுடன் எமது சிறிய தீவிற்குரியதாக சிங்கள மயப்படுத்திக் கொண்டனர்.

அதேநேரம் ஆசியாவைச் சேர்ந்த இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் பழைமைவாய்ந்த குறிப்பிடத்தக்க நாகரிகங்களூடாக பௌத்தமதமானது பெருநோக்கில் வளர்ச்சிகள் கண்ட பெரும் தத்துவ வளர்ச்சிக்குரிய ஒன்றாகவேயுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

849



# தேடி வந்த தலைவலி!



...சாலையில் உருண்டு போய் விழுந்தான் குள்ளன். அந்தச் சமயம் பார்த்து, அந்த வழியாக படை வீரன் ஒருவன் வந்தான்.

சற்று முன்பிருந்தே எல்லாவற்றையும் அந்தப் படை வீரன் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். தன் கண் முன்னால் ஒருவனை சலீம் உதைத்துக் கொன்றுவிட்டான் என முடிபிற்கு வந்த படை வீரன், நீதிபதியிடம் அவனை அழைத்துச் சென்றான்.

விசாரித்த நீதிபதி தீர்ப்புச் சொன்னார்... நீங்கள் ஒருவனை உதைத்துக் கொன்றுவிட்டீர்கள். இந்த நீதி மன்றம் உங்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறது.

நடந்ததைக் கேள்விப்பட்டு அங்கே வந்த அப்துல்லா, நீதிபதி அவர்களே, சலீம் குற்றமற்றவர். அந்தக் கொலையைச் செய்தது நான்தான்! என்றார்.

நான் உங்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கிறேன் என்றார் நீதிபதி.

அப்போது அங்கே வந்த வைத்தியர் இவனைக் கொன்றது நான் தான் என்றார்.

மிகவும் தடுமாற்றம் அடைந்தார் நீதிபதி. இது என்ன தேடி வந்த தலைவலி என்றபடியே தீர்ப்புச் சொன்னார். நீங்களும்தான் குற்றவாளி. எனவே, உங்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கிறேன்!

நீதிபதி தன் இருக்கையை விட்டு எழ முற்படும்போது... அலி ஓடி வந்தான்.

நீதிபதி அவர்களே! நான்தான் அந்தக் குள்ளனை வைத்தியரின் வீட்டில் போட்டேன். அவன் என் வீட்டில் சாப்பிடும்போதுதான் மரணம் ஏற்பட்டது! என்றான்.

நீதிபதி ஒரு குவளை நீர் அருந்தித் தன் பதற்றத்தைத் தணித்துக் கொண்டார். பிறகு, இறுதித் தீர்ப்பை அறிவித்தார்.

ஆமாம்... ஆமாம்! இவனும் குற்றவாளிதான். இவனையும் தூக்கில் ஏற்றும்படி உத்தரவிடுகிறேன்!

தீர்ப்பைக் கேட்ட ஓர் அதிகாரி, நீதிபதி அவர்களே... நான்கு பேரையும் தூக்கில் ஏற்றுவது நியாயமா என்று கேட்டார்.

நீதிபதி அதையும் ஏற்றுக் கொண்டார். ஆனால் யாரைத் தூக்கில் போடுவது? என்று குழம்பினார்.

அப்போது, அரண்மனையில் இருந்து ஒரு படை வீரன் ஓடி வந்தான். அவனுடன் அரண்மனை வைத்தியரும் வந்தார்.

நேற்று அரண்மனையில் இருந்து ஒருவன் காணாமற் போய் விட்டான். அவன் ஒரு பாடகன், நகைச்சுவையான கதைகள் சொல்வான். சுல்த்தானின் அன்பிற்குரிய அவன் ஒரு குள்ளன் என்றான் வீரன்.

நீதிபதி துள்ளி எழுந்தார். நீங்கள் பக்கத்து அறையில் கிடக்கிற பிணத்தைப் பாருங்கள். அவனும் ஒரு குள்ளன்தான் என்றார்.

பார்த்த படைவீரன், இவனே தான் என்றான்.


அரண்மனை வைத்தியர், பிணத்தின் கன்னங்களை அழுத்தினார். நெஞ்சைப் பிசைந்தார். பிறகு உரக்கச் சொன்னார். நம் அதிர்ஷ்டம் இந்தக் குள்ளன் இன்னும் சாக வில்லை!

குள்ளனை பரிசோதித்த வைத்தியர் தன் பெட்டியைத் திறந்து, கம்பி போல் எதையோ எடுத்து, குள்ளனின் தொண்டைக்குள் செலுத்தி இழுத்தார். மீன் முள் ஒன்று வெளியே வந்து விழுந்தது. மீன் முள் மூச்சுக் குழாயில் சிக்கி இருந்ததால் மயக்கமாகி இருக்கிறான் என்றார் வைத்தியர்.

சற்று நேரத்தில் குள்ளன் கண்களைத் திறந்து பார்த்தான். எல்லோரும் நிம்மதி அடைந்தார்கள். நம்ம காமெடி நீதிபதிக்கும் தலைவலி தீர்ந்தது. அவரது குழப்பத் தீர்ப்பில் இருந்த அனைவரும் உயிர் தப்பினார்கள்!

முற்றும்.......

## மு. நவரத்தினசாமி



முருகுப்பிள்ளை நவரத்தினசாமி 1909 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டம், தொண்டைமானாறு என்ற இடத்தில் பிறந்தார்.

இவர் இலங்கையின் நீச்சல் வீரர் ஆவார். பாக்குநீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்தவர் என்ற பெருமை பெற்றவர். தனது 44ஆவது அகவையில் 1954 மார்ச் 25 இல் இவர் இச்சாதனையைப் புரிந்தார்.

நவரத்தினசாமி பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயின்றார். படிப்பை முடித்த பின்னர் அரச சேவையில் இணைந்து வேளாண்மை பயிற்றுனராகப் பணியாற்றி னார். தனது ஊரிலேயே லீலாவதி என்பவரைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு மூன்று மகன்கள்.

பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே நீந்துவதில் விருப்பம் கொண்டிருந்த இவர் பத்து வயதில் 10 மைல்களுக்கும் மேலாக நீந்திச் சாதனை புரிந்தவர்.

ஆங்கிலக் கால்வாயை ஆங்கிலேயர் ஒருவர் நீந்திக் கடந்தார் எனற செய்தியைப் படித்த போதே, அருகில் உள்ள பாக்குநீரிணையை நீந்திக் கடக்க வேண்டுமென ஆவல் கொண்டார். அதற்காகக் கடுமையான பயிற்சிகளை எடுத்துக் கொண்டார்.

1954 மார்ச் 25 மாலை 4:10 மணிக்கு அவர் தனது இரண்டாவது பயணத்தை ஆரம்பித்தார். பல இடர்களுக்கு மத்தியில் 1954 மார்ச் 26 மாலை 7 மணிக்கு 27 மணி நேரம் நீந்திய பின்னர் வேதாரணயத்தை வந்தடைந்தார்.

அடுத்தநாள் காலையில் கோடியக்கரை, வேதாரண்யம், திருநெல்வேலி மக்கள் பெரும் வரவேற்பு அளித்தனர். நவரத்தினசாமி மார்ச் 28 மாலை 6:30 இற்கு வல்வெட்டித்துறை வந்தடைந்தார். சேர் கந்தையா வைத்தியநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரி.இராமலிங்கம், வ. நல்லையா, என். எம். பெரேரா உட்பட பெருமளவு மக்கள இவரை வல்வெட்டித்துறையில் வரவேற்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்திய, இலங்கை ஊடகங்கள் இச்சாதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதியிருந்தன. இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

கொழும்பில் காலிமுகத்திடலில் 1954 ஏப்ரல் 9 இல் நடந்த ஒரு பாராட்டு நிகழ்வில் பிரதமர் இவருக்கு ஒரு வெள்ளிக் கேடயத்தைப் பரிசாகக் கொடுத்தார். எலிசபெத் மகாராணி தனது பிறந்த நாள் நினைவாக இவருக்கு British Empire Medal (BEM) வழங்கிக் கௌரவித்தார்.

07.2014
01

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1825 - ஐக்கிய இராச்சிய நாணயங்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் ஆக்கப்பட்டன.
- 1851 - ஆஸ்திரேலியாவில் விக்டோரியா குடியேற்றப் பகுதி நியூ சவுத் வேல்சிலிருந்து பிரிக்கப்பட்டது.
- 1862 - ரஷ்யாவின் அரச நூலகம் அமைக்கப்பட்டது
- 1876 - சேர்பியா துருக்கி மீது போரை அறிவித்தது.
- 1881 - உலகின் முதலாவது அனைத்துலக தொலைபேசித் தொடர்பு கனடாவின் நியூ பிரன்ஸ்விக் மாநிலத்துக்கும் ஐக்கிய அமெரிக்காவின் மேய்ன் மாநிலத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.
- 1921 - சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - ஏபிசி (அவுஸ்திரேலிய ஒலிபரப்புச் சேவை) ஆரம்பிக்கப்பட்டது.
- 1960 - இத்தாலியிடமிருந்து சோமாலியா விடுதலை அடைந்தது.
- 1962 - ருவாண்டா விடுதலை அடைந்தது.
- 1962 - பெல்ஜியத்திடம் இருந்து புருண்டி விடுதலை அடைந்தது.
- 1967 - ஐரோப்பிய சமூகம் உருவாக்கப்பட்டது.
- 1976 - மடெய்ரா தீவுகளுக்கு போர்த்துக்கல் சுயாட்சியை வழங்கியது.
- 1978 - அவுஸ்திரேலியாவின் வட மண்டலம் அவுஸ்திரேலிய பொதுநலவாயத்துக்குக் கீழ் சுயாட்சி பெற்றது.
- 1979 - சொனி நிறுவனத்தின் வோக்மன் அறிமுகம் செய்யப்பட்டது.
- 2002 - சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.
- 2004 - காசினி-ஹியூஜென்ஸ் விண்கலம் சனிக் கோளின் சுற்று வட்டத்திற்குள் சென்றது.

### பிறப்புகள்

- 1924 - தி. ச. வரதராசன், ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர் (இ. 2006)
- 1927 - சந்திரசேகர், 11 ஆவது இந்தியப் பிரதமர்
- 1935 - டி. ஜி. எஸ். தினகரன், இந்தியாவின் முன்னணி கிறிஸ்தவ மறைபரப்புனர்
- 1961 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை (இ. 2003)
- 1961 - டயானா, வேல்ஸ் இளவரசி (இ. 1997)

### இறப்புகள்

- 1969 - மு. நவரத்தினசாமி, பாக்குநீரிணையை நீந்திக் கடந்தவர் (பி. 1909)
- [illegible] எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



85

ஒருநாளும் உங்களை நான் தேடி வந்து சந்தித்த தில்லை.

ஆனால், அந்த ஒரு கறுப்புப் பகலில் மட்டும் உங்களை ஓடிவந்து பார்க்காமல் என்னால் உட்கார முடியவில்லை.

ராஜாஜி மண்டபத்தில் உங்கள் இறுதிப் படுக்கையில் ரோஜா மாலைகளுக்கு மத்தியில் ஒரு ரோஜா மலையாய்க் கிடத்தப்பட்டிருந்தீர்கள்.

உங்களைத் தொட்டுப் பார்க்க நினைத்து, தொட முடிந்த தூரம் வந்தும் தொட முடியாமல் நின்றேன்.

எம்.ஜி.ஆருக்கே மரணமா?

எனக்கு முதன்முதலில் மரண பயம் வந்தது.

காற்று- சமுத்திரம்- வானம்- எம்.ஜி.ஆர். இவைகளெல்லாம் மரணிக்க முடியாத சமாச்சாரங்கள் என்று எங்கள் கிராமத்து மக்களைப் போலவே நானும் நம்பிக் கிடந்த நாட்களுண்டு.

அன்று அந்த நான்காவது நம்பிக்கை நசிந்துவிட்டது.

47 முதல் 87 வரை நாற்பதாண்டு காலம் தமிழர்கள் உச்சரிக்கும் ஐம்பது வார்த்தைகளில் ஒரு வார்த்தையாய் இருந்த பெயரை மரணத்தின் மாயக்கரம் அழித்துவிட்டதா?

இமைக்காமல் கிடந்த உங்களை இமைக்காமல் பார்த்தேன்.

நீண்டநேரம் என்னை அங்கே நிற்க அனுமதிக்கவில்லை.

ஜனத்திரள் என்னைப் பிதுக்கியது.

சட்டென்று நகர்ந்து ராஜாஜி ஹோலின் ராட்சசத் தூண் ஒன்றை அடைக்கலம் பற்றி, கூட்டத்தை நோட்டமிட்டேன்.

அங்கங்கே அரசாங்க விதிகளுக்கு உட்பட்டுச் சிலர் அழுது கொண்டி




ருந்தார்கள். நிஜக் கண்ணீர் வடித்தவர் பலர்; நீலிக்கண்ணீர் வடித்தவர் சிலர்.

வருத்தக் கண்ணீர் வடித்தவர் பலர்; வாடகைக் கண்ணீர் வடித்தவர் சிலர்.

உயிரைக் கண்ணீராய் ஒழுக விட்டவர் பலர்; மிகப் பலர்.

என்னால் அழ முடியவில்லை.

அழுகை வரவில்லை: மனதில் மட்டும் சோகப் பனி மூட்டம்.

"நான் ரசித்துக் காதலித்த ராஜகுமாரா! உனக்கா மரணம்?" என்று உதட்டுக்குத் தெரியாமல் நாக்கு உச்சரித்துக் 'கொண்டது.

அங்கே கூடியிருந்த அரசியல்வாதிகளில் பலர் நாளைகளைப் பற்றியே தர்க்கித்துக் கொண்டிருக்க- நானோ உங்கள் நேற்றுகளை நினைத்தே விக்கித்துக் கொண்டிருந்தேன்.

கண்டியோ வடவனூரோ எங்கேயோ பிறந்தீர்கள்; தமிழ் நாட்டுக்குள் பிழைக்க வந்தீர்கள்; தமிழ் நாட்டில் பல பேரைப் பிழைக்க வைத்தீர்கள்.

கும்பகோணம் யானையடிப் பள்ளி- வறுமையில் கழிந்த வால்டாக்ஸ் ரோடு- முகம் பார்க்க முடியாமல் முதல் மனைவியின் மரணம்- கோடையில் எப்போதாவது படபடவென்று பொழிந்து ஏமாற்றிவிட்டுப் போகும் மேகம் மாதிரி படவுலகில் அவ்வப்போது சின்னச் சின்ன வாய்ப்புகள்- ஒரே ஒரு க்ளோஸ் அப் போடக்கூடாதா என்று மூத்த இயக்குனர்களிடம் முறையீடு- கதருக்குள் இருந்து கொண்டு கலைஞர் மீது காதல்- வந்து சேர்ந்த வாய்ப்புகளைச் சிதறாமல் பயன்படுத்திக்கொண்ட செம்மை- முப்பது வயதுக்கு மேல் வாழ்க்கையில் சந்திரோதயம்; நாற்பதுக்கு மேல் சூரியோதயம்- படபடவென்று வளர்ச்சி- மனிதநேயம் என்னும் மாட்சி- காட்சியிலிருந்து கட்சி- கட்சியிலிருந்து ஆட்சி- அப்பப்பா! என்ன வளர்ச்சி உங்கள் வளர்ச்சி!

அயல் வீட்டுக்காரருக்கு அறிமுகமில்லாத ஒரு வாழ்க்கையோடு தொடக்கமானீர்கள்; அரசாங்க மரியாதையோடு அடக்கமானீர்கள்.

அன்று கடைசிப் படுக்கையில் உங்களைக் கண்டபோது- ஒரு சரித்திரம் சரிந்து கிடக்கிறது என்று நினைத்தேன்.

ஓர் அபூர்வம் முடிந்துவிட்டது என்று நினைத்தேன்.

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 04 இல் கூட்டெண் 07 இன் பலன்கள்

26

### தோற்றம்

ராகுவுடன் கேது இணைந்த ஆதிக்கப் பலன் இது. சாதாரண உயரமாக இருப்பர். ஒல்லியுமின்றிக் குண்டுமின்றி உடலிருக்கும். மாநிறமாக இருப்பர். உடல் பலமிருக்கும். உடல் வளையக் கூடியதாக இருக்கும். தோலில் ஏதும் குறையிருக்கலாம். காலில் பலம் குறையலாம். அழகாக இருப்பர். எடுப்பான மூக்கு, பருத்த உதடுகள், அளவான வாய் இருக்கும். பற்கள் சரியாக இரா. பின்தலை பெரிதாக இருக்கும்.

### குணம்

சரியான குறும்புக்காரராக எல்லோருக்கும் நண்பராக இருப்பார். ஓயாமல் பேசுவார். துணிச்சலுடன் தீய சகவாசத்துடன் விளையாட்டாகவே குற்றங்களைச் செய்து மாட்டிக் கொண்டு அவதிப்படுவர். சண்டை, வம்பு எனில் விட மாட்டார். முரட்டுப் பேச்சும் நடத்தையும் இருந்தாலும் நல்ல அறிவும் ஞானமும் உடையவர்களாக இருப்பர்.

சட்டம், சம்பிரதாயம், நீதி, நேர்மை எல்லாம் அறிந்து நல்லவராக அவற்றுக்கு அடங்கி வாழத் தீர்மானிப்பர். வாக்குத்திறமை இருக்கும். பின்னாளில் வாக்கு சித்தியே கிட்டும். யோக, வேதாந்தம், மதம் ஆகியவற்றில் பற்றும் அறிவும் ஏற்படும். ஆவி போவதாயினும் தம் கொள்கையை விட்டுத்தர மாட்டார். உலகியலும் அதற்கப்பாலுள்ள ஆன்மிகமும் இவருக்கு நன்றாகப் பிடிக்கும். உண்மையில் அவற்றைப் பின்பற்றுவார். கலை, உலக வாழ்வில் பிடிப்பு இருக்கும். சாத்திரப்படி உலக சுகம் காணவே வாழுவர்.

இசை, நடனம், எழுத்து முதலியவை விருப்பப்பட்டு பயில நினைப்பார். சிற்பம், ஓவியம், பிற கலைகளும் இவரால் ரசிக்கப்படும். எதிலும் தூய்மை, அழகு, பக்குவம் நாடுவார். சமையல் நன்கு செய்வார். வீட்டு, அலுவலக வேலைகளில் திறமை உள்ளவர்.

நண்பர்களுடன் இருக்கும்போதே தனித்திருப்பார். பிறருக்கு அஞ்சமாட்டார். யாரும் இவரை அடிமைப்படுத்த முடியாது. சுதந்திரமாக இயங்குவார்.

கொஞ்ச நேரம் எடுத்துக் கொண்டாலும் எதையும் முழுமையாக சிரமப்பட்டுச் செய்து முடித்துப் பாராட்டுப் பெறுவார். சிறுவயதில் பள்ளிப் பருவத்திலேயே பேச்சுப் போட்டியில், நாடக நடிப்பில் பரிசு பெற்றிருப்பார்.

தம் தீர்மானத்தின்படி நடப்பார். எப்போதும் சிந்தனை இவருள் ஓடிக் கொண்டே இருக்கும். அடக்கம், பெரியவரிடம் மரியாதை, கட்டுப்பாடு இருந்தாலும் கோபமும் அசாத்தியமாக வரும். இவர் கைவெழுத்து மிக அழகாக இருக்கும். சித்திரம்கூட வரைவர். ஏதோ ஒரு சோகம் மனதில் இருக்கும்.

### குடும்பம்

சாதாரண குடும்பத்தில் பிறப்பார். துடிதுடிப்புடன் இருந்து வளருவார். நன்றாகப் படிப்பார். வறுமையுடன் போராடுவார். சிறு வயதில் பெற்றோரில் ஒருவரையோ இருவரையோ இழப்பார். அல்லது பெற்றோரால் பயன்பெறாமல் பிரிந்து இருப்பார். திடீர் மாற்றங்கள் வாழ்க்கையில் நிறைய வரும். பாடசாலையில்கூட கெட்டிக்கார மாணவராகவும் மக்காகவும் மாறி மாறி இருக்க நேரும். பரீட்சையில் தோல்வி ஏற்படலாம். காதல் வெற்றி பெறாது. சிலருக்கு மணமே ஆகாமலும் போகும். நடுவயதிற்குப் பின்பே நல்ல காலம் உண்டாகும். திருமணம் நடந்தால் தாமதக் கல்யாணமாகும். புத்திரப்பேறு அதிகமிராது. வயதான சமயத்தில் காதல் கைகூடி வரும். பிரச்சினையில் சிக்கக் கூடாது. சகோதர சகோதரி நன்றாக இருப்பார். இவர்களுடன் பெரிய கொடுக்கல் வாங்கல்கள் இருக்காது. அதிகப் பற்றற்ற தொடர்பிருக்கும். குடும்ப வாழ்க்கை நிம்மதியாயிராது.

### தொழில்

கலை மனம் கொண்ட இவர்கள் எழுத்திலும் பேச்சிலும் வல்லவர். கவிதை படி



ப்பர். இது தொடர்பான தொழில் புரிவர். ஆன்மிகப் பேச்சாளராவர். மத சம்பந்தப்பட்ட பணி செய்வர். ஆசிரமங்களில் கோயில்களில் வேலை பார்ப்பர். பத்திரிகை, குறிப்பாக ஆன்மிகப் பத்திரிகையில் வேலை பார்ப்பர். ஆன்மிக நூலெழுதுவார். வீடு அமையும். வருமானம் சாதாரணமாகும். அடிப்படை வசதிகளோடு வாழலாம். பிற்பகுதி வாழ்க்கை நிம்மதியாகும். சில நோய்களுடன் கழியும். வறுமை இருக்கும்.

### நோய்

வெப்பம் சார்ந்த நோய் நடுவயதுக்கு மேல் வரும். பி.பி., மூலம் வரும். சிறுநீரகப் பாதைத் தொல்லை உண்டு. அடிக்கடி காலில் அடிபடும். தலைவலி தகர்க்கும். வயிறு சரியாக இராது. (தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உடலையும் உள்ளத்தையும் உருக்குலைக்கும் ஒற்றைத் தலைவலி (Migraine) எனும் இந்த உபாதை நவீன வாழ்க்கை முறை காரணமாக வயது வித்தியாசமின்றி பலருக்கும் தற்போது அதிகரித்து வருகிறது. சிறு குழந்தைகளுக்கும் கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கும் நடுத்தர வயது ஆண், பெண் இருபாலாருக்கும் பரவலாக ஒற்றைத் தலை வலி வருவதைக் காணலாம். ஒற்றைத் தலைவலி ஏற்படுவதற்குக் காரணம் அவரவர் வாத, பித்த, கபம் என்ற முக்குற்றத்தின் உடல் வாகுக்கு தகுந்தவாறு வலது பக்கமாகவோ ஒற்றைத் தலைவலி பலவித காரணங்களால் வருவதால் பலவித கோணத்தில் ஆராய்ச்சி செய்து பலவித பெயர்களில் அழைக்கிறார்கள். ஒற்றைத் தலைவலி ஏற்படும் போது ஒளி, ஒலிக்கு சகிப்புத் தன்மை குறைகிறது. இதனால் அவதிப்படுபவர்கள் இருளான, அமைதியான சூழ்நிலையில் இருக்க விரும்புவார்கள்.

இந்திய மருத்துவத்தில் குறிப்பாக வர்ம மருத்துவத்தில் ஒற்றைத் தலைவலி என்ற இந்நோய்க்கான காரணங்களையும் அதற்கான சிகிச்சை முறைகளையும் சித்தர்கள் தெளிவாகக் கண்டறிந்து கூறியுள்ளனர்.

ஓய்வில்லா சிந்தனை, மன அழுத்தம், தூக்கமின்மை, குடலில் வாய்வு அதிகரிப்பினால் ஏற்படும் குடல் அழற்சி, குடல் புண், குடல் எரிச்சல் இவைகளாலும் குடலை இயக்கும் அபாண வாயு சீற்றம் கொண்டு குடல் நீரை சிரசுக்கு ஏற்றி ஒற்றைத் தலைவலி வருவதுண்டு. வர்ம பரிகார முறைப்படி ஒற்றைத் தலைவலி வருவதற்கு அபாண வாய்வின் சீற்றம், வயிறு எரிச்சல், பித்த நீர் அதிகரிப்பு இவை தான் காரணம் என்று வர்ம பரிகாரத்தில் கூறியுள்ளார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் தலையில் காயங்கள் ஏற்படும்போது அதனால் ஏற்ப டும் கருணீக சூலை நீர் அதாவது தலையில் காயங்களால் உற்பத்தியாகும் காய நீரானது நாளடைவில் கருணீக சூலை நீராக மாறி விஷத்தன்மை அடைந்து கருணீக கபால சூலை நீராக மாறும்.

இதுவும் ஒற்றைத் தலைவலிக்கு முக்கிய காரணமாகும். இவ்வாறு கருணீக கபால சூலை நீரினால் வரும் ஒற் றைத் தலைவலியை வர்ம பரிகார சிகிச்சை மூலமாக மட்டும்தான் குணப்படுத்த முடியும் என்பது சித்தர்கள் ஆய்ந்தறிந்து கூறியுள்ள உண்மை.

இதைத்தான் அகத்தியர் எழுதிய பரிபூரண நூலில் காயநீருக்கும் கருணீக கபால சூலை நீருக்கும் வர்ம மருத்துவம் சிறந்தது என்று கூறி விபரித்துள்ளார். இதையே வர்ம மருத்துவர்கள் இந்த ஒற்றைத் தலைவலிக்கு சிறந்த மருத்துவமாக கையாண்டு வருகிறார்கள்.

மேலும் ஒற்றைத் தலைவலிக்கு காரணம் உடலில் உள்ள பித்தத்தின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்களே என்கிறதுவர்மமருத்துவம். இதனையே பித்த அபகாரம் என்கிறோம்.

வாத ,பித்த ,கபம் என்ற மூன்று உடல் வாகுக்குத் தகுந்தவாறு இந் தப் பாதிப்பு ஏற்படுகின்றது.பல்வேறு காரணங்களால் இரத்தம் சூடேறும் போது பித்தத்தின் செயற்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறது.

இரவுப் பணி மூலம் தூக்கம் கெடும்போது இரத்தம் சூடாகி பித்த அபகாரம் ஏற்படுகிறது. எனவே முறையான் ஓய்வும் நல்ல உறக்கமும் மனிதர்களுக்கு அவசியம்.

அதேபோல ஒற்றைத் தலைவலி உள்ளவர்கள் உச்சி வெயிலில் அலைவதைத் தவிர்க்க வேண்டும்.

நேரத்துக்கு உண்ணாமை, போதிய உறக்கமின்மை, கடும் வெயிலில் அலைதல், செரியாமை, மலச்சிக்கல், சீரான சுவாசமின்மை போன்றவை ஒற்றைத் தலைவலி வர முக்கிய காரணங்களாகும்.

பித்த அழற்சியால் ஏற்படும் இந்நோயை வர்ம பரிகார சிகிச்சையின் மூலம் முற்றிலும் குணப்படுத்த முடியும்.

வர்ம மருத்துவம் என்பது சித்தர்கள் வாழ்க்கை அனுபவ முறையில் இருந்து கண்டறிந்த உண்மையாகும்.

எனவே இதுபோன்ற நோயை முழுமையாகக் குணப்படுத்தும் தன்மையும் வலிமையும் வர்ம மருத்துவத்துக்கு உண்டு.

பாரம்பரிய அனுபவமும் அறிவும் மிக்க சித்த, ஆயுர்வேத, யுனானி போன்ற மருத்துவ முறைகளில் பல வழிமுறைகள் உண்டு.

ஆனால் இது பித்த அபகாரத்தின் அதீத காரணமாக வரும் நோயாக இருப்பதால் அகத்தியர் பெருமான் எழுதிய வர்ம பரிகார முறையில் சிகிச்சை பெறுவது சிறந்தது.

(நன்றி:-இணையம்)




**ஒற்றைத் தலைவலி வருவது ஏன்? வர்ம மருத்துவம் சொல்லும் விளக்கம்**

செரியாமையினால் குடலில் புளிப்புத் தன்மை ஏற்பட்டு, குடலில் உள்ள நீர் கடினத்தன்மை உள்ள நீராக மாறி விடுகிறது. இந்த நீர் பித்தநீருடன் கலந்து தலைப்பகுதியில் தேங்குகிறது. பின்னர் சர நிலையைப் பொறுத்து இந்த நீர் ஒரு பக்கமாகத் தேங்குகிறது. அதாவது சரநிலையானது வலது பக்கமாக இயங்கும் போது இடது பக்கம் ஒதுங்கு கிறது. சரநிலையானது இடது பக்கம் செயற்படும் போது இந்த நீர் வலது பக்கம் ஒதுங்குகிறது. எந்தப் பக்கம் இந்தக் கடின நீர் ஒதுங்குகிறதோ அந்தப் பக்கம் தலைவலி ஏற்படுகிறது. சரமானது சுழிமுனையில் இருக்கும் போது தலையின் இருபகுதிகளில் இந்த நீர் தங்கி வலியை ஏற்படுத்துகிறது. இந்த நோய் குறித்து வர்ம பரிகார நூலில் அகத்தியர் விபரமாகச் சொல்லியிருக்கிறார்.

இப்படி வலது, இடது மற்றும் உச்சத்தில் தங்கும் நீரைக் கலைத்து சரசுவாசத்தை ஒழுங்குபடுத்தும்போது ஒற்றைத் தலைவலி முற்றிலும் குணமடைகிறது.

தலையிலுள்ள வர்ம புள்ளிகளையும் அதைச்சார்ந்த நரம்புகளையும் வர்மத்தின்மூலம் இயக்கம் கொடுப்பதால் வர்ம புள்ளிகள் சரிவர இயக்கி ஒற்றைத் தலைவலியைமாற்றுகிறது.

# ஆயிரம் பிறை கண்ட அதிபர் "ஒறேற்ரர்"



ஸ்கந்தாவின் 120 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் ஒறேற்ரர் அவர்களின் உருவச்சிலை இன்று திறந்து வைக்கப்படுகின்றது. இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

சுத்தமான வெள்ளை வேட்டியும் நஷனலும் அணிந்து முழங்கால் வரை நீண்ட சால்வையும் சந்தனப்பொட்டும் இட்டு பொக்குவாய் சிரிப்புடன் அவர் வந்தார். சுன்னாகம் சந்தியில் நீண்ட நேரம் வெடி ஓசை 1958-1959 என நினைக்கின்றேன். யாழ்.மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதன் முறையாக ஒரு கிராமத்துப் பாடசாலை சம்பியன் ஆகியதும் உதைபந்தாட்ட வீரர்கள் குழுவுடன் ஒறேற்ரர் என எல்லோராலும் அறியப்பட்ட ஸ்கந்தாவின் அதிபர் ஒறேற்ரர் சுப்பிரமணியம் சேர்.சுன்னாகம் சந்தியில் பல மணிநேரம் காத்து நிற்க வேண்டியதாயிற்று. வெடியோசை முடிந்ததும் மாணவர்கள் ஒறேற்ரர் ஐயாவை தோளில்சுமந்து ஸ்கந்தாவின் வாசல் வரைகோஷம் எழுப்பியவாறு சென்ற காட்சியை நான் பல தடவைகள் நினைந்து மகிழ்வடைந்ததுண்டு.

1944 ஆம் ஆண்டு ஒறேற்ரர் ஸ்கந்தாவின் அதிபராக பொறுப்பேற்றார். 16 ஆசிரியர்களுடன் 295 மாணவர்களுடனும் 15 வகுப்பறைகளையும் கொண்ட ஸ்கந்தாவைப் பொறுப்பேற்ற ஒறேற்ரர் 1962 இல் ஓய்வு பெற்ற போது ஸ்கந்தா அன்னை 61 ஆசிரியர்களுடனும் 2045 மாணவர்களுடனும் 57 வகுப்பறைகளையும் உள்ளடக்கி புதுப்பொலிவு பெற்றிருந்தமை அதிபர் ஒறேற்ரரின் அதியுயர்ந்த சாதனை என கல்விமா ன்கள் அப்போது புகழாரம் சூட்டினர்.

ஸ்கந்தாவில் ஏழை மாணவர்களுக்கும் சிறுபான்மை தமிழ் மாணவர்களுக்கும் அனுமதி முயற்கொம்பாக இருந்த காலத்தில் பலரதும் பெரும் எதிர்ப்புக்கு மத்தியில் தாழ்த்தப்பட்டோர் எனப்பட்ட பிள்ளைகளுக்கும் ஏழைப் பெற்றோரின் பிள்ளைகளுக்கும் ஸ்கந்தாவில் அனுமதி வழங்கிய அதிபர் ஒறேற்ரரின் சமூக மறுமலர்ச்சி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களி டையே ஒரு துணிவையும் வரவேற்பையும் பெற்றது.

முன்னாள் அதிபர் ஹன்டி பேரின்பநாயகம், செனட்டர் பி. நாகலிங்கம் போன்றோரின் ஆதரவுடன் ஒறெற்ரர் இளைஞர் காங்கிரஸில் இணைந்தார். ஆயினும் கால்மாக்ஸின் மாக்சிய சித்தாந்தத்தில் மிகவும் ஈடுபாடு காட்டினார். ஸ்கந்தா விடுதியில் அனைத்து மாணவர்களுக்கும் சமபந்தி சமபோசனம் என்னும் உன்னத-உயர்ந்த கொள்கையை பலத்த எதிர்ப்புக்களின் மத்தியிலும் அமுல்படுத்தினார். இந்த மாற்றத்தால் யாழ். மண்ணில் மூலை முடுக்கெல்லாம் கல்வி என்ற தீபத்தை ஏற்றி வைத்த பெருமைக்குரியவராக ஒறேற்ரர் போற்றப்பட்டார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்கள் மாத்திரமின்றி தோட்டத் தொழிலாளர்களின் வறிய மாணவர்களையும் ஸ்கந்தாவில் இடம்கொடுத்து அவர்களுக்கு கல்வியுடன் ஊண், உறையுள் இரண்டையும் வழங்கி கல்வியுலகின் ஒப்பற்ற அதிபராக ஒறேற்ரர் பரிணமித்தார்.

வகுப்புக்கள் பற்றாக்குறையுடன் இயங்கிய ஸ்கந்தாவில் மாணவர்களின் வருகை அதிகரித்தபோது இலங்கைத்தீவில் எங்கும் இல்லாத இரு நேரப்பாடசாலை முறையை அறிமுகம் செய்தார் அதிபர் ஒறேற்ரர்.

1958 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் பின் தென்னிலங்கை மாணவர்கள் பலரும் யாழ். நோக்கி படையெடுத்தனர்.

அவர்களை வரவேற்று இடமளித்த பெருமை ஸ்கந்தாவின் புகழ் பூத்த அதிபர் ஒறேற்ரர் சுப்பிரமணியம் ஐயாவையே சாரும்.

இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்த போது அங்கு கல்வி கற்று வந்த ஒறேற்ரர் இந்திய விடுதலை இயக்கத்தின் இலட்சியங்களாலும் கொள்கைகளாலும் கவரப்பட்டார்.

இந்திய சுதந்திர இயக்கம் எவ்வாறு நாட்டு மக்களிடையே ஒற்றுமையை செயற்படுத்த முனைப்புடன் செயற்பட்டதோ அவ்வாறு இலங்கை மக்களையும் சாதி, இன, மத, மொழி வேறுபாடின்றி ஒற்றுமைப்படுத்தி இலங்கைக்கும் பூரணசுதந்திரத்தை பெற முடியும் என ஒறேற்ரர் நம்பினார்.

ஒறேற்ரர் சுப்பிரமணியம் ஐயா (National Integration) தேசிய ஒருங்கிணைப்பின் மூலம் எமது மக்களுக்கு உயர்ந்த சேவைகளைச் செய்ய முடியும் என நம்பினார்.

சகல மக்களையும் ஒன்றாகஇணைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். ஒறேற்ரர் சொல்லில் மாத்திரமின்றி செயலிலும் அதை செய்ய நிரூபித்தார்.

கல்வித்துறையில் முதன்மை பாடசாலையாக மிளிர்ந்த ஸ்கந்தா விளையாட்டுத் துறையிலும் சாதனைகள் பலவற்றை சாதித்தது. 1958, 59 இல் உதைபந்தாட்ட (JSSA) சம்பியன்களாக ஸ்கந்தாவின் முதலாவது அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

கிரிக்கெட் போட்டிகளிலும் பல ஆண்டுகள் யாழ். மாவட்ட சம்பியன்களாக ஸ்கந்தா அணி தெரிவு செய்யப்பட்டது. ஒறேற்ரரின் காலத்திலேயே ஸ்கந்தாவில் சாரணர் இயக்கம் மற்றும் மாணவிகளின் வழிகாட்டி இயக்கம் என்பன ஆரம்பிக்கப்பட்டு பல பாசறைகளிலும் கலந்து புகழ்பெற்றனர்.

இந்தியாவில் இருந்தும் புகழ்பெற்ற பல ஆசிரியர்கள் ஸ்கந்தாவில் கற்பித்தார்கள். இங்கு மாணவர்களுக்கு சிறந்த போதனையூட்ட ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டபோது ஒறேற்ரர் மிகுந்த தற்துணிவுடன் இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை ஸ்கந்தாவுடன் இணைத்தார். 1956-57இல் கே.ராஜப்பன் அவர்களும் கே.பிரபாகரன் அவர்களும் எஸ். சீனிவாசன் அவர்களும் எஸ்.என். நடராஜா அவர்களும் இந்தியாவில் இருந்து வந்து ஸ்கந்தா மாணவர்களுக்கு சிறந்த சேவையற்ற முடிந்தமைக்கு அதிபர் ஒறேற்ரர் நல்வழி காட்டியமை பாராட்டப்படவேண்டியதே.

ஒறேற்ரரின் வெற்றிகளுக்கு பக்கபலமாக இருந்தவர் உப அதிபர் வி.சுப்பிரமணியம் அவர்கள் என்பதை குறிப்பிடாமல் இக் கட்டுரையை முடிக்க முடியாது.

14 ஆம் லூயின் காலத்தில் பிரான்ஸைப் பின்பற்றியே நாகரிகத் துறையில் உலக நாடுகள் வளர்ந்தது போல யாழ்ப்பாணப் பாடசாலைகள் கல்வித்துறையில் உலக நாடுகள் துறையிலும் ஏனைய பாட இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஸ்காந்தாவைப் பின்பற்றினர் என்பது கல்வித் துறைசார் நிபுணர்களால் பல்லாண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத்துணை தரம்வாய்ந்த கல்லூரியாக ஸ்கந்தாவை உயர்த்தியவர் ஒறேற்ரர் என எல்லோராலும் அறிப்பட்ட சி.சுப்பிரமணியம் என்றால் அது மிகையாகாது.

ஸ்கந்தவரோதயன் சபா. புஷ்பநாதன்
சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரால் மீட்கப்பட்ட மக்களிடம் விசாரணையை பதிவு செய்யுங்கள்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

**(கொழும்பு) மக்களிடம் சாட்சியங்களை பெற்றுக் கொண்டால் உண்மை வெளிவரும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஸ்கைப் போன்ற முறைமைகளை பாவித்து சாட்சியங்கள் பெறுவதை இன்றைய உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவிக்கையில்,

ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை நியமித்த சர்வதேச விசாரணைக் குழு தனது விசாரணைகளை வெளிநாடுகளில் ஆரம்பிக்கவுள்ளது. இது ஏற்கனவே நாம் எதிர்பார்த்த விடயம் தான்.

இதன்போது புலம்பெயர் தமிழர்களிடம் சாட்சியங்களை பெறுவதிலேயே அதிக கவனம் செலுத்தப்படும்.

அதேவேளை, அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுதலை புலிகள் சார்பான அமைப்புக்களை இலக்கு வைத்தே இவ்விசாரணைக் குழு சாட்சியங்களை பெற்றுக் கொள்ளும்.

இவ்வாறு இலங்கைக்குள் இயங்கும் நிறுவனங்கள் இராச்சியத்திற்கு எதிராக சர்வதேச விசாரணைக்குழுவில் சாட்சியங்களை வழங்குகின்றன.

அவர்கள்ளை தேசத்துரோகியாக முத்திரை குத்தி சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தடுக்கவில்லை. யுத்தத்தின் போது 3 இலட்சம் பொதுமக்கள் படையினரால் மீட்கப்பட்டு பாதுகாக்கப்பட்டனர்.

எனவே, இம்மக்கள் சாட்சியங்கள் வழங்குவதை அரசாங்கம் எதிர்க்கவில்லை. ஏனென்றால் விடுதலைப் புலிகளால் மனிதக் கேடயங்களாக சிறை பிடிக்கப்பட்ட மக்கள் தாம் அனுபவித்த கொடுமைகளை அறிவார்கள்.

அவ்வாறானதொரு நிலையில் எமது படையினர் மக்களை மீட்டு பாதுகாத்தனர். எனவே அம் மக்களிடம் தான் சர்வதேச விசாரணைக்குழு சாட்சியங்களை கேட்க வேண்டும். அப்போது தான் உண்மை வெளிவரும்.

நவீன தொழில்நுட்பங்களை பாவித்து ஸ்கைப் போன்ற முறைமைகளை பாவித்து சாட்சியங்கள் பெறுவதை இன்று உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

எனவே, அவ்வாறான முறைகளில் மக்களிடம் சாட்சியங்களை பெற வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (2)

## பண்ணாகம் மெய்கண்டான் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தினால் கடந்தாண்டு நடத்தப்பட்ட க.பொ.த சாதாரண தரப் பெறுபேற்றுப் பகுப்பாய்வில் யா/பண்ணாகம் மெய் கண்டான் மகாவித்தியாலயம் நூறு வீத சித்தி பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா மற்றும் மேற்படி வித்தியாலய அதிபர் எஸ்.கணேசதாசன் உறுதிப்படுத்தியுள்ளனர். (2)

# எல்லை பாதுகாப்புக்கு பூரண ஆதரவளிக்கப்படும்

## இலங்கை தெரிவிப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவளிக்க்ப்படும் என அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அட்மிரல் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் அவுஸ்திரேலிய அரசாங்கம் பின்பற்றி வரும் கடுமையான கொள்கைகள் வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார். புகலிடக் கோரிக்கையாளர் விவகாரங்கள் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (2)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 23 கிலோ கஞ்சா பறிமுதல்

தமிழ்நாடு நாகை அருகே மணியந் தீவிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 23 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்த பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் இருவர் தப்பியோடியதாகவும் அவர்களை பொலிஸார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே மணியந்தீவிலிருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தப்படுவதாக நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்துவேதாரண்யம்பொலிஸார்மணியந்தீவுக்குச்சென்றுசந்தேகப்படும்படியாகமோட்டர்சைக்கிளில்வந்த மூன்று பேரை சோதனை செய்தனர்.

அவர்கள் பைகளை போட்டு விட்டு தப்பி ஓடினர். அவர்களில் ஒருவரான பழனிவேல் என்பவரை கைதுசெய்தனர்.அவர்களின்பைகளை சோதனை செய்தபோது அதில் 23 கிலோ எடையுடைய கஞ்சா இருந்தது.

6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கஞ்சாவை பறிமுதல் செய்த பொலிஸார் பழனிவேலிடம் நடத்திய விசாரணையில் புதுப் பள்ளியை சேர்ந்த வெங்கடேசன் என்பவருடன் வந்தேன். மற்றொருவர் பெயர் தெரியாது எனக் கூறினார்.

மூவரும் கஞ்சாவை மணியந் தீவிலிருந்து இலங்கைக்கு படகு மூலம் கடத்த முயன்றதாக பொலிஸ் தரப்பில் தெரிவித்தனர். தப்பி ஓடிய இருவரை பொலிஸார் தேடி வருகின்றனர். (அ-2)

# யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இன்று தனது 27 ஆண்டுகால மனித நேய சேவையை நிறைவு செய்கிறது

## பயனடைந்தவர்களில் நானும் ஒருவன்

நான் ஒரு நீரிழிவு நோயாளி. இந்த நிறுவனத்தின் மூலமாக இரண்டு தடவை விசேட பிரத்தியேக பாதணியை பெற்று நலம் அடைந்துள்ளேன்.

இந்த நிறுவனம் பால், இனம், மொழி, சமயம் கடந்து மனித நேயத்துடன் பணியாற்றி வருவதை நான் கண்டேன்.

இங்கு மேல் அதிகாரிகளுடன் சிற்றூழியர்களும் பணியாற்றி வருகிறார்கள். எப்போதும் இன்முகத்துடன் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அணுகி கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன்மாற்றுவலுவுடையோர் மறுவாழ்வு எனும் ஒரே நோக்கத்துக்காக அல்லும் பகலும் பாடுபட்டு உழைக்கின்றார்கள். இவர்களுக்கு எமது செபத்துடன் கூடிய வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

இதற்கு முன் நான் கடைகளில் வாங்கி பாவித்த காலணிகள் எனது தோலிற்கு பொருத்தமின்றி அண்டி காயங்களை ஏற்படுத்தியது.

ஆனால் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தில் பாதத்திற்கு ஏற்றவகையில் பிரத்தியேகமாக அளவெடுத்து மென்மையாக தயாரித்து தந்த காலணிகள் காயங்களை ஏற்படுத்தவில்லை.

சௌகரியமானதாகவும் எனது கால் விரல்களில் ஏற்பட்ட தாக்கத்தில் இருந்து பாதுகாத்து நல்ல படியாக நடமாட உகந்ததாகவுள்ளது.

வலுவிழந்த மக்கள் இந்த நிறுவனத்தின் மூலகமாக பயன் அடைய பரிந்துரை செய்கிறேன்.

எனது ஜெபத்துடன் கூடிய நல் வாழ்த்துக்களை இந்நிறுவன முகாமைத்துவக் குழுவினருக்கும் பணியாளர்களுக்கும் தெரிவிக்கின்றேன்.

அருட்பணி
லா.செபஸ்ரியான் குரூஸ்.

## யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் நீடூழி வாழ்க

சின்னராசா தரணியா ஆகிய நான் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பயனாளிகளில் ஒருவராவேன்.

எனக்கு 2 வயதாக இருக்கும் போது எறிகணைத் தாக்குதலினால் எனது வலது காலை இழந்தேன்.

அதன் பின்பு 1999 ஆம் ஆண்டில் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தில் செயற்கை கால் பொருத்தினேன். அன்றிலிருந்து இன்றுவரை யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பயனாளியாக இருந்து வருகின்றேன்.

இப்போது எனக்கு வயது 21 ஆகும். நான் இன்று யாழ்ப்பாண பல் கலைக்கழகத்தில் பயின்று வருகின்றேன்.

எனக்கு செயற்கைக் கால் பொருத்தியதில் இருந்து என்னால் எனது அன்றாட வேலைகளை செய்யமுடிகின்றது.

எனது குடும்பத்தினருக்கு வேண்டிய உதவிகளை செய்து வருகின்றேன்.

இதற்கு பிரதான காரணம் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனமே ஆகும். இந் நிறுவனமானது பயனாளிகளை அரவணைத்து சிறந்த சேவையாற்றி வருகின்றது.

நான் இப்பொழுது கல்வியில் சிறந்த பெறுபேற்றை பெற்று பல் கலைக்கழகம் செல்வதற்கு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனமும் ஒரு காரணமாகும்.

மனித நேயம் மிக்க இந் நிறுவனத்தால் வலுவிழந்தோருக்கு எவ் வித உளதாக்கமும் இல்லாது சமூகத்தில் மாற்றுவலுவுள்ளோர் என்ற எண்ணமும் இல்லாது வாழக்கூடிய தாகவும் உள்ளது.

இந் நிறுவனத்தில் கடமையாற்றுபவர்கள் பயனாளிகளை அன்புடனும் பரிவுடனும் அரவணைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வது மாத்திரமல்லாது மிகக் குறுகிய காலத்தில் பயிற்சியளித்து பயனாளிகளை மாற்றுத்திறனாளிகளாக மாற்றுகின்றனர்.

இம் மனித நேயச் சேவை யாற்றும் இந்த நிறுவனம் நீண்ட காலத்திற்கு தமது சேவைகளை தொடர்ந்து வலுவிழந்தோரின் வாழ்வை புனர் வாழ்வாக மாற்றவேண்டும் என்று மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

சின்னராசா தரணியா,
வல்வெட்டித்துறை.

## நான் வாழும் வாழ்க்கை யாழ்.ஜெய்ப்பூர் அளித்தது

கந்தையா கிருஸ்ணகுமார் ஆகிய நான் 14 வயதாக இருக்கும் போது விமானக் குண்டு தாக்குதலினால் எனது இடது காலை முழங் காலுக்குக் கீழ் இழந்ததுடன் வலது காலிலும் பெருவிரல் தவிர்ந்த நான்கு விரல்களையும் இழந்தேன்.

மந்திகை ஆதார வைத்திய சாலையில் பணியாற்றிய வெளிநாட்டு மருத்துவர் மூலம் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் சேவைகளையும் செயற்கை காலைப் பற்றியும் அறிந்து கொண்டேன்.

அங்கு எனது தாயாருடன் சென்று அவயவம் பொருத்துவதற்கு முன்னரான இயன்மருத்துவ சிகிச்சையும் மருத்துவ சிகிச்சையும் பெற்றுக் கொண்டதன் பின் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தில் தங்கியிருந்து செயற்கைக் காலைப் பொருத்தி தேவையான நடைப்பயிற்சியைப் பெற்றேன்.


அவ்வேளை எமது யாழ்.ஜெய்ப் பூர் நிறுவன முகாமைத்துவக் குழு அன்னையரும் ஊழியர்களும் என்னை அன்போடு பராமரித்து கரம் பிடித்து காலூன்றி நடக்க வைத்தார் கள்.

எனது கல்வியைத் தொடரமுடியாததால் எனது எதிர்காலம் கேள்விக் குறியாக அமைந்திருந்த வேளை பெற்றோர், உற்றார் என்னைப் பராமரிக்க இடர்பட்ட போது தமது நிறுவனத்தில் எனக்கு தொழில்நுட்ப பயிற்சியளித்து தொழில்நுட்ப உதவியாளராக நியமனம் வழங்கியதை என்றும் மறக்கமுடியாது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்தேன். பின்பு நான் திருமணம் செய்து யாழ்ப்பாணம் திரும்பிய போது மீண்டும் எனக்கு தமது நிறுவனத்தில் வேலைவாய்ப்பை வழங்கி புதிய செயற்கை கால்களையும் மாற்றித்தந்து என்னை சமூகத்தில் ஓர் மனிதனாக அடையாளம் காட்டிய எமது முகாமைத்துவக் குழு அன்னையருக்கும் என்னை ஓர் சகோதரனாக பாவித்து என்னோடு பணிபுரியும் சக நண்பர்களுக்கும் நான் என்றும் நன்றி கூற கடமைப்பட்டவனே. அதுமட்டுமல்ல இப்போது யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் எனது சொந்த இடமாக தோன்றுகிறது.

தற்போது நான் சகலவிதமான வேலைகளையும் சிரமமின்றி செய்கின்றேன். பல மைல்களுக்கு சைக்கிள் ஓடுதல், பாரம் தூக்குதல் என்பவற்றுடன் எனது மனைவி, இரு பிள்ளைகளையும் பராமரித்து மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் வாழ்கின்றேன். எனவே யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு எனது இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை இந்த இனிய வேளையில் சமர்ப்பிக்கின்றேன்.

கந்தையா கிருஸ்ணகுமார்.
பயனாளியும், பணியாளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளைக் கண்டறியுமா ஐ.நா. விசாரணைக் குழு?

இலங்கையில் போரின் இறுதி ஏழு ஆண்டுகளிலும் நிகழ்ந்த மீறல்கள் குறித்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 12 பேர் கொண்ட ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக் குழுவை வழி நடத்தும், அதற்கு ஆலோசனை வழங்கும் மூன்று நிபுணர்களின் விபரங்களை, கடந்த 25 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டிருந்தார்.

முன்னதாக அவர் கடந்த மாத தொடக்கத்திலேயே ஐ.நா. விசாரணைக் குழுவின் இணைப்பாளராக, பிரித்தானியாவைச் சேர்ந்த மனித உரிமை விசாரணையாளர் சன்ட்ரா பெய்டாஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தார். எனினும், வெளியில் இருந்து இந்த விசாரணைகளைக் கண்காணிக்கும், வழி நடத்தும் நிபுணர்களைத் தெரிவு செய்வதில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சற்றுத் திணறிப் போய்விட்டதாகத் தெரிகிறது.

ஏனென்றால், கடந்த 10 ஆம் திகதி ஐ.நா. மனித் உரிமைகள் பேரவையின் 26 ஆவது அமர்வைத் தொடக்கி வைத்து உரையாற்றிய போது இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது பற்றிய அறிவிப்பை வெளியிட்டிருந்தார் நவநீதம்பிள்ளை. ஆனால், இரண்டு வாரங்கள் கழித்தே. இந்த விசாரணைக் குழுவை வழி நடத்தும், அதற்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்களின் பெயர்களை வெளியிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக உருவாக்கப்பட்ட இந்த விசாரணைக் குழுவுக்கான நிபுணர்கள் சரியாக மூன்று மாதங்கள் கழித்தே நியமிக்கப்பட்டுள்ளனர். முன்னதாக, ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடனோ, அடுத்த சில நாட்களிலோ இந்த விசாரணைக் குழுவை நவநீதம்பிள்ளை நியமித்து விடுவார் என்றே பெரும்பாலானோர் எதிர்பார்த்திருந்தனர். இலங்கை அரசாங்கமும் அவ்வாறே கருதியிருந்தது. ஏனென்றால், விசாரணைக்கான எல்லாத் தயார்ப்படுத்தல்களையும் அவர் மேற்கொண்ட நிலையில் தான், அமெரிக்கா இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதாகவே கருதப்பட்டது.

அவ்வாறானதொரு நிலை இருந்திருக்குமேயானால் அது நிச்சயம் இலங்கையைப் பழி வாங்குவதற்கான திட்டமிட்ட நகர்வு என்று துணிந்து கூறலாம். ஆனால், அத்தகைய எதிர்பார்ப்புகளை முற்றிலுமாக தகர்த்துவிட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பின்னர், விசாரணைக் குழுவுக்கான மூன்று நிபுணர்களை அறிவித்துள்ளார் நவநீதம்பிள்ளை.

இந்தக் காலதாமதம், இந்த முயற்சியில் உள்ள சவால்களை தெளிவாகவே எடுத்துக்காட்டியுள்ளது. பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்ட்டி அதிசாரி, நியூசிலாந்தின் முன்னாள் நீதிபதி டேம் சில்வியா கார்ட்ரைட், பாகிஸ்தானின் சட்ட நிபுணர் அஸ்மர் ஜகாங்கீர் ஆகியோரையே நவநீதம்பிள்ளை இந்த நிபுணர் குழுவின் உறுப்பினர்களாக தெரிவு செய்துள்ளார். இந்த நிபுணர் குழுவின் நியமனம் தொடர்பாக நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையில் இது ஒரு சவால் மிக்க விசாரணை என்றும் அதற்கு உதவ முன்வந்த மதிப்புக்குரிய நிபுணர்களைப் பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விசாரணை மிகவும் சவால் மிக்கது என்பதால்தான், நவநீதம்பிள்ளையால் அதற்குத் தேவையான நிபுணர்களை உடனடியாக ஒன்று திரட்ட முடியாதுபோனது.

இலங்கை அரசாங்கம் இந்த விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்பது உறுதியாகத் தெரிவித்திருந்த சூழலில், பல்வேறு மதிப்புக்குரிய நிபுணர்களும் அதில் பங்களிப்புச் செய்யப் பின்னடித்திருந்தனர். அவர்களுள், ஐ.நாவின் முன்னாள் பொதுச் செயலர் கொபி அனானும் அடக்கம். முன்னதாக நவநீதம்பிள்ளை இரண்டு வெளியக நிபுணர்களை மட்டுமே நியமிக்கத் திட்டமிட்டிருந்தார். அதனுடன் எவ்வாறாயினும், ஒருவர் ஆபிரிக்க அல்லது ஆசிய நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார்.

அதற்குக் காரணம் இது மேற்கு நாட்டவர்களால் திணிக்கப்பட்ட ஒரு விசாரணை. கொபி அனான் விசாரணைக் குழுவில் இடம்பெற விரும்பாத நிலையில், நியூசிலாந்தில் முன்னர் நீதிபதியாகவும், ஆளுநராகவும் இருந்த டேம் சில்வியா கார்ட்ரைட் மீது நவநீதம்பிள்ளையின் கவனம் திரும்பியது. 70 வயதான அவர், கம்போடியாவில் கெமரூஜ் ஆட்சியின் போது நிகழ்ந்த போர்க்குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்காக, அந்த நாட்டு அரசாங்கத்தின் உதவியுடன் நியமிக்கப்பட்ட போர்க்குற்ற விசாரணைத் தீர்ப்பாயத்தின் இரண்டு நீதிபதிகளில் ஒருவராகப் பணியாற்றி வந்தார். அவர் பாலினப் பாகுபாடுகளுக்கு எதிரான விசாரணை நிபுணராகவும் விளங்கியவர்.

ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு உதவ அவர் இணக்கம் தெரிவித்ததையடுத்து, அவரது நியமனம் முதலில் உறுதியானது.








கம்போடிய போர்க்குற்ற விசாரணைத் தீர்ப்பாய நீதிபதி பதவியில் இருந்து விலகியே அவர், இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்கும் குழுவுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர் குழுவில் இடம்பெறப்போகிறார்.

இதையடுத்து இரண்டாவது நிபுணரை எப்படியாவது, ஆசியா அல்லது ஆபிரிக்காவில் இருந்து தெரிவு செய்ய நவநீதம்பிள்ளை முயற்சித்தார். அதேவேளை, நிபுணர் குழுவின் மதிப்பையும் தரத்தையும் உயர்த்தும் வகையில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஒருவரையும் இணைத்துக் கொள்வது மிகவும் பொருத்தமானது என்று உணர்ந்திருந்தார் நவநீதம்பிள்ளை.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்து பொருத்தமானதொரு நிபுணரைத் தெரிவு செய்வதில் இழுபறி ஏற்பட்டிருந்த சூழலில் இரண்டாவது நிபுணராக பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்டி அதிசாரியைத் தெரிவு செய்தார் அவர். மார்டி அதிசாரி அமைதிக்கான நோபல் பரிசைப்பெற்றவர். 77 வயதான அதிசாரி, 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை பின்லாந்தின் ஜனாதிபதியாகப் பணியாற்றியவர். கொசோவாவுக்கான ஐ.நாவின் சிறப்புத் தூதராக செயற்பட்ட அவர், நீண்ட காலமாக நிலவி வந்த கொசோவா பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, சேர்பியாவிடமிருந்து கொசோவாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவர்.

அதற்காகவும் மூன்று தசாப்தங்களாக பல்வேறு சர்வதேச பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவியதற்காகவும், அவருக்கு நோபல் பரிசு 2008 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இவர் நமீபியா, இந்தோனேசியாவின் ஆசே, கொசோவா, ஈராக் உள்ளிட்ட விவகாரங்களில் தலையிட்டு தீர்வு காண உதவியவர். பின்லாந்து இராணுவத்தின் கப்டனாகப் பணியாற்றியவர். பினிஸ் மொழியுடன் சுவிஸ், பிரெஞ்சு, ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழிகளிலும் பேசும் திறன் பெற்றவர்.

நமீபியாவுக்கான ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதியாகச் செயலாற்றிய அதிகாரி, அங்கு அமைதியை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியவர். 1989 ஆம் ஆண்டு நமீபியாவில் நடந்த சுதந்திரத் தேர்தலுக்குப் பின்னர், அதிசாரிக்கு நமீபியாவின் கௌரவக் குடியுரிமை வழங்கப்பட்டது. வட அயர்லாந்து சமாதானப் பேச்சுக்களின் ஒரு கட்டமாக ஐ.ஆர்.ஏயின் ஆயுதக் கிடங்குகளை ஆய்வு செய்யும் பணியில், சிறில் ரமபோசாவுடன் இணைந்து பங்கேற்றவர் அதிசாரி.

2005 ஆம் ஆண்டு ஆசே சுதந்திர இயக்கத்துக்கும், இந்தோனேசிய அரசுக்குமிடையில், அமைதிப் பேச்சுக்களுக்குத் தலைமை தாங்கிய அதிசாரி, வெற்றிகரமான அமைதி உடன்பாட்டுக்கு வழிவகுத்தவர். பின்னர், கொசோவா பிரச்சினைக்குத் தீர்வு காணவும் உதவியிருந்தார். உலகின் மதிப்பு மிக்க பல்வேறு அமைதிக்கான அறக்கட்டளைகள், அரச சார்பற்ற நிறுவனங்களில் அங்கம் வகிக்கும் அதிசாரிக்கு உலகின் பெருமளவு நாடுகள் சிறப்பு கௌரவ விருதுகளை வழங்கியுள்ளன.

இந்தளவுக்குப் புகழ்பெற்ற ஒருவரை, இலங்கையில் நடந்த மீறல்கள் குறித்த விசாரணைக்குத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து சேர்த்துள்ளார் நவநீதம்பிள்ளை. எந்தவகையிலும் முன்னெப்போதும் இலங்கை விவகாரங்களில் தொடர்புபடாதவர்களாகத் தேடிப் பார்த்து இந்த விசாரணைக் குழுவுக்கான உறுப்பினர்களை நவநீதம்பிள்ளை தெரிவு செய்துள்ள நிலையில், சிங்கள ஊடகம் ஒன்று அதிசாரியை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று கூறியுள்ளது.

ஏனென்றால், அவர் போரை நிறுத்த முயன்றவராம். இதுதான் அவர் விடுதலைப்புலி ஆதரவாளரானதற்கான் காரணம். போரை நிறுத்த முயன்றவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்பதே அரச தரப்பினதும் இதுபோன்ற சிங்கள ஊடகங்களினதும் வாதமாக உள்ளது. வேறு வகையில் குற்றம் சாட்ட முடியாததால், போரை நிறுத்துமாறு வலியுறுத்தியவர் விடுதலைப்புலி ஆதரவாளராகத்தான் இருக்க வேண்டும் என்று கணக்குப் போட்டுள்ளது சிங்கள ஊடகம். அதேவேளை, இரண்டு வெளியக நிபுணர்களைத் தெரிவு செய்யவிருந்த நவநீதம்பிள்ளை மூன்றாவது நிபுணரைத் தெரிவு செய்ய எடுத்த முடிவுக்குக் காரணம், அண்மையில் அளுத்கமவில் நடந்த முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள்தான் என்று கருதப்படுகிறது.

ஏனென்றால், மூன்றாவது நிபுணராக அவர் தெரிவு செய்துள்ள அஸ்மா ஜகாங்கீர், ஒருமத சிறுபான்மையினர் விவகார நிபுணராவார். இவர் மத சுதந்திரம் தொடர்பான ஐ.நா. அறிக்கையாளராக 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர். அப்போது இலங்கையிலும் வந்து, மத சுதந்திரம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கை சமர்பித்திருந்தார்.

அதற்கு முன்னதாக, நீதிக்குப் புறம்பான படுகொலைகள், திட்டமிட்ட படுகொலைகள் குறித்து ஐ.நா. அறிக்கையாளராகவும் பணியாற்றியுள்ளார். பாகிஸ்தான் உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவராகவும் மனித உரிமை ஆணையத் தலைவராகவும் செயற்பட்டவர்.

சிறந்த சட்ட நிபுணரான இவரைத் தெரிவு செய்ததன் மூலம், ஆசியாவைச் சேர்ந்த ஒருவரும் இந்தக் குழுவில் இடம்பெறும் வாய்ப்பை அளித்தார் நவநீதம்பிள்ளை. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளின் பின்னரே இவரது நியமனம் உறுதி செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

ஆக, இந்த வன்முறைகள் ஐ.நாவின் விசாரணைப் பொறிமுறையை இன்னும் வலிமையானதாக்க உதவியுள்ளது. அத்துடன், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சிறப்பு நிபுணர்களின் உதவியுடன் செயற்படும் விசாரணைக் குழு, அடுத்த ஆண்டு ஏப்ரல் நடுப்பகுதி வரை இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைக் குழு வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், சுதந்திரமானதாகவும் நம்பகரமானதாகவும் இருக்க வேண்டும் என்பது நவநீதம்பிள்ளையின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

உயர் நம்பகத்தன்மை வாய்ந்தவர்களைக் கொண்டதாக விசாரணைக் குழுவை நவநீதம்பிள்ளை அமைத்துள்ள போதும், இந்த விசாரணைக்கு ஒத்துழைக்க மறுப்புத் தெரிவித்துள்ளது இலங்கை அரசு. இதன்மூலம், 2010 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் செயலர் நியமித்த மர்சூகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவின் விசாரணையைப் புறக்கணித்து இழைத்த அதே தவறை மீண்டும் இழைத்துள்ளது அரசாங்கம்.

இதற்காக அரசாங்கமும், சிங்கள மக்களும் இப்போது வேண்டுமானால் பெருமை கொள்ளலாம். ஆனால், பின்னொரு காலத்தில் அவர்கள் அதற்காக வருத்தம் கொள்ளக்கூடும்.

*-ஹரிகரன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு அடக்குமுறையைக் கையாண்டால் அதை சர்வதேச மயப்படுத்துவேன்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

**முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து தெளிவுபடுத்துவதில் எவ்விதமான தவறும் இல்லை எனவும் சட்டக் கல்லூரி பரீட்சைகள் ஆங்கிலத்தில் மட்டும் இடம்பெறுவதை நான் எதிர்க்கின்றேன் எனவும் இப்பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவேன் எனவும் சமூக ஒருமைப்பாட்டு மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை அமைத்த சர்வதேச விசாரணைக் குழுவை எதிர்க்கின்றோம்.

எமது பாராளுமன்றத்திலும் இதற்கெதிராக பிரேரணையை நிறைவேற்றினோம். ஏனென்றால் இவ்வாறான விசாரணை இலங்கையின் இறையாண்மையை மீறுவதாகும்.

ஆனால், தனது சமூகம் சார்ந்த பிரச்சினைகள் பாதுகாப்பு தொடர்பாக அமைச்சர் ஹக்கீம் வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்து தெளிவுபடுத்துவதில் எவ்விதமான தவறும் இல்லை.

அதற்கு அமைச்சருக்கு உரிமையுள்ளது. உதாரணமாக தொழிலாளர்களுக்கு எதிராக அரசாங்கம் அடக்கு முறையை கடைப்பிடிக்குமானால் அரசில் அமைச்சராக பதவி வகிக்கும் நான் அதனை தடுக்க முயற்சிகளை மேற்கொள்வேன். ஆனால் அது வெற்றி பெறவில்லையானால் சர்வதேச ரீதியாக அப்பிரச்சினையை கொண்டு செல்வேன்.

அதுமட்டுமல்லாது உலகில் தொழிலாளர்களுக்கான அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவேன். அதற்கு எனக்கு உரிமையுள்ளது. அரசிற்குள் இருந்தாலும் பல்வேறு விடயங்களில் முரண்பாடுகள் உள்ளன.

சட்டக்கல்லூரி பரீட்சைகள் சிங்களத்திலும் தமிழிலும் நடத்தப்படுவது இரத்துச் செய்யப்பட்டு ஆங்கிலத்தில் மட்டும்தான் நடத்தப்படுமென தீர்மானம் எடுக்கப்பட்டது. இதனை கடுமையாக எதிர்க்கின்றேன். அரசாங்கத்திற்கும் எனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளேன்.

இது கைவிடப்படாவிட்டால் இப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொள்ள சர்வதேச ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (2)

# அவுஸ்திரேலிய அகதிகள் படகு புறப்பட்டமைக்கு ஆதாரங்களில்லை

## இந்திய கரையோரப் படையினர் மறுப்பு

(கொழும்பு)

இலங்கை தமிழர்கள் 153 பேர் பாண்டிச்சேரி கரையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சென்றமைக்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை என்று இந்திய கரையோரப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை அண்மித்து கொண்டிருப்பதாக கூறப்படும் 153 இலங்கை அகதிகள் அடங்கிய படகு தொடர்பில் தற்போது கருத்துக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் அகதி ஒரு வரை கோடிட்டு இந்த படகு இந்தியாவின் பாண்டிச்சேரியில் இருந்து ஜூன் 13 ஆம் திகதி புறப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே 2010 ஆம் ஆண்டில் விசாகப்பட்டிணத்தில் இருந்து அகதிகள் குழு ஒன்று அவுஸ்திரேலியாவுக்கு புறப்படவிருந்த நிலையில் இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டது.

இதனையடுத்து தற்போது அகதிகள் பாண்டிச்சேரியில் இருந்து புறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறான மனிதக் கடத்தல் சம்பவம் குறித்து ஒரு மாதத்துக்கு முன்னரே எச்சரிக்கை விடுக்கப்பட்டு கடல் பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டதாக பாண்டிச்சேரி கரையோர பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அகதிகள் படகு ஒன்று புறப்பட்டமைக்கான ஆதாரங்கள் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நோர்வேயின் முயற்சிக்கு மக்கள் ஆதரவு வழங்கமாட்டார்கள்

## செஹான் சேமசிங்க எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதியை பதவி கவிழ்க்க நோர்வே முயற்சித்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் பகுதியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் பங்கேற்ற போது அவர் மேற்படி கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நாட்டின் அரசாட்சிப் பொறுப்பிலிருந்து ஜனாதிபதியை பதவி விலக்குவதே நோர்வேயின் நோக்கமாக அமைந்துள்ளது. எனினும், இந்த நோக்கத்திற்கு மக்கள் ஆதரவு வழங்கமாட்டார்கள்.

நாட்டில் பல்வேறு மத மற்றும் இனத் தரப்புக்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் முயற்சியில் நோர்வே ஈடுபட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு முதல் மக்கள் ஜனாதிபதியுடன் இருக்கின்றார்கள். நாடாளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 161 பேர் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கின்றனர்.

ஜனாதிபதி கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

நாட்டின் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலையை ஜனாதிபதியே ஏற்படுத்தினார் என நாடாளுமன்ற உறுப்பினர் சேமசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# கோத்தாவின் தீர்மானத்திற்கு முஸ்லிம்கள் வரவேற்பு

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தீர்மானத்திற்கு முஸ்லிம் பேரவை வரவேற்பை வெளியிட்டுள்ளது.

சமூக இணைய வலையமைப்புக்களை பயன்படுத்தி இன மத வன்முறைக்களைத் தூண்டும் நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் அறிவித்திருந்தார். பாதுகாப்புச் செயலாளரின் இந்தத் தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.பாதுகாப்புச் செயலாளரின் தீர்மானமானது இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி சர்வதேச சமூகத்திற்கும் முக்கியமானது என சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறெனினும், இந்தத் தீர்மானம் இதற்கு முன்னதாக எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென தெரிவித்துள்ளது. சமூக வலையமைப்புக்களுக்கு மட்டுமன்றி ஏனைய ஊடகங்கள் மற்றும் பொதுக் கூட்டங்களின் போது இந்த சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென முஸ்லிம் பேரவை, பாதுகாப்புச் செயலாளரிடம் கோரியுள்ளது.

பேருவளை அளுத்கம சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கூடிய விரைவில் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)

# இன்று ஒரு தகவல்

## மனமும் குரங்கும்

ஒரு தடவை பெர்னாட்ஷாவைப் பார்த்து ''உலகம் ஏன் உங்களைப் சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது?'' என்று கேட்டார்களாம்.

அதற்கு அவர் சொன்னாராம்:

''ஒரு வருடத்தில் 2 அல்லது 3 தடவைக்கு மேல் யாருமே சிந்திப்பதில்லை. நான் வாரத்திற்கு ஒன்றிரண்டு தடவை சிந்திக்கிறேன். அதுதான் உலகம் என்னை சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது''என்று சொன்னாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மனிதர்கள் யாருமே அதிகமாக சிந்திப்பதில்லை என்பது தெரிகிறது. மனம் சுத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் சிந்தனை தெளிவாக இருக்கும்.

மனம் எந்தளவுக்கு சுத்தமாக இருக்க வேண்டும் தெரியுமா?

மார்க்ஸ் அரேலியஸ் என்ற அறிஞர் அதற்கு ஓர் அளவுகோல் கொடுத்திருக்கிறார். திடீரென்று உங்கள் முன் ஒருத்தர் வந்து நின்று இப்ப நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படியே சொல்லுங்கள் என்று கேட்டால் உடனே தயங்காமல் உள்ளது உள்ளபடியே...

''இதைத்தான் இப்பொழுது நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று சுலபமாக சொல்லக் கூடிய அளவிற்கு மனம் இருக்க வேண்டுமா? அதுதான் சுத்தமான மனம் என்கிறார் அவர்.

அப்படி சொல்லக் கூடிய நிலைமையிலேயா நாமெல்லாம் இப்ப இருக்கிறோம்.

வெளிப்படையாகப் பேசுங்கள் சேர் என்று கேட்டால்...

''அது எப்படி சேர்? மனதில் நினைப்பதையெல்லாம் வெளியில் காட்டிக் கொள்ள முடிகிறதா?''என்று தானே கேட்கிறோம். அதன்பின் எப்படி மனம் சுத்தமாகிறது?

நம்மில் பலர் மனத்தை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். ஆனால் அது முடிவதில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மனம் ஒரு குரங்கு மாதிரி என்று சும்மாவா சொன்னார்கள்? மனதுக்கும் குரங்குக்கும் அப்படி என்ன ஒரு சம்பந்தம்?

இரண்டும் அடிக்கடி தாவிக்கொண்டிருக்கிறது. இதுதான் நமக்குத் தெரிந்த ஒற்றுமை. எனக்கு தெரிந்த நண்பர் ஒருத்தர் இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார்.

''மனம், குரங்கும் இவை இரண்டையும் எப்பொழுதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் நமக்குத்தான் மிகவும் கஷ்டம்'' என்றார்.

சில சமயம் குரங்கை விட மோசமான மனதெல்லாம் கூட நம்மில் சிலரிடம் உண்டு. திருக்குற்றாலத்தில் ஒரு தடவை ஒரு ஆள் கையில் வாழைப்பழத்தை வைத்துக் கொண்டு வேகமாக ஓடிக் கொண்டிருந்தான். பின்னால் ஒரு குரங்கு துரத்திக் கொண்டே ஓடி வந்தது. அதற்கு பின்னால் ஒருத்தர் அவர்கள் இருவரையும் துரத்திக் கொண்டு வெறுங்கையுடன் ஓடிக் கொண்டிருந்தார்.

வழியில் ஒருத்தர் இந்த ஆளை நிறுத்திக் கேட்டார். அந்த ஆள் தன் கையில் வாழைப்பழம் வைத்திருக்கிறான். அந்தக் குரங்கை பார்த்து விட்டு ஓடுகிறான். அது நியாயம்.

குரங்கு அந்த வாழைப்பழத்தை பார்த்துவிட்டது. அதனால் அவனுக்குப் பின்னால் ஓடுகிறது. அதுநியாயம். நீ எந்த சம்பந்தமும் இல்லாமல் அவருக்குப்பின் ஓடுகிறாயே? இது என்ன நியாயம்? என்றார்.

''நான் ஓடுவது நியாயம் தான்''என்றார் இவர்.

''எப்படி''என்று கேட்டார் அவர்.

''அந்த ஆள் என் கடையில் தான் வாழைப்பழம் வாங்கினான். காசு கொடுக்காமல் ஓடுகிறான் சேர்'' என்று சொல்லிவிட்டு துரத்த ஆரம்பித்தார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜரட்ட பல்கலை.ஆசிரியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்களால் தமக்கு இழைககப்பட்ட அநீதிக்கு எதிர்ப்பு தெரிவித்து விரிவுரையாளர்கள் நேற்று முதல் நிர்வாக சேவை மற்றும் கல்வி செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் சில விரிவுரையாளர்கள் மாணவர்களினால் சுமார் 23 மணித்தியாலங்களுக்கும் மேலாக பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து பல்கலைக் கழகம் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முதல் முகாமைத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் யாவும் வழமைக்கு திரும்புமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே விரிவுரையாளர்கள் நிர்வாக மற்றும் கல்வி செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவிப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை, பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் விரிவுரையாளர்களுடன் மூர்க்கத்தனமாக நடந்துகொண்ட மாணவர்கள் மற்றும் ஏனையோர் மீது நாட்டினதும், பல்கலைக்கழகத்தினதும் சட்ட திட்டத்திற்கமைய கடுமையான தண்டனை வழங்க வேண்டியது அவசியமென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஷானிக்கா ஹிரிபுரேகம தெரிவித்தார்.

சிறு குழுவினரே இதன் பின்னணியிலிருந்து செயற்படுகின்றனர். ஏனைய மாணவர்கள் அச்சுறுத்தப்பட்டு பலவந்தமாக இதில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதனை ஒரு வகையான பயங்கரவாதச் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

இவ்வாறானதொரு நிலைமை இனிமேலும் பல்கலைக்கழக வளாகத்திற்குள் இடம்பெறாமல் இருக்க வேண்டுமாயின் மேற்படி செயலில் ஈடுபட்ட மாணவர்களுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.

குறித்த மாணவர்கள் ஏற்கனவே குற்றம் இழைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கல்வி மற்றும் பல்கலைக்கழக செயற்பாடுகளிலிருந்து இடை நிறுத்தப்பட்டார்கள்.

இந்நிலையில் இவர்கள் மீண்டும் உபவேந்தர் மற்றும் சிறைக் கைதிகளை பணயம் வைத்து மேலும் தமது குற்றச் செயல்களை அதிகரித்துக் கொண்டுள்ளனர்.

இம் மாணவர்களுக்கெதிராக எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் குறித்து பல்கலைக்கழக மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (2)

## நீரிழிவு தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மூளாய் சுவட்டுறவு வைத்தியசாலையில் நாளை மறுதினம் வியாழக்கிழமையன்று பி.ப.3 மணிக்கு நீரிழிவு சம்பந்தமான கலந்துரையாடலொன்று இரத்தினம் அறக்கட்டளை நிறுவனத்தின் ஆதரவுடன் சுவட்டறவு வைத்திய சாலை மூளாய் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்.போதனா வைத்திய சாலையின் முன்னாள் பொது வைத்திய நிபுணர் வைத்தியர் சபாரட்ணம் சிவகுமாரன் கலந்து நீரிழிவு சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

எனவே, இக் கலந்துரையாடலில் அனைவரும் கலந்து பயன் பெறுமாறு அதன் தலைவர் கேட்டுள்ளார். (அ)

# பிரபாகரன் என்னை கொல்ல முயன்றார்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

பிரபாகரன் என்னைக் கொலை செய்வதற்கு முயன்றதாகவும் அதனால் தனது உடம்பின் ஒரு பகுதி யில் இரும்புத்துகள்கள் உள்ளதாகவும் அமைச்சர் ராஜிதசேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தங்காலை, கலமெட்டி மீனவர் துறைமுகத்திற்கு நேற்று அடிக்கல்லை நாட்டிவைத்ததன் பின்னர் அங்கு நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மீன்பிடித்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று காவியுடையணிந்து கொண்டு சண்டியர்கள் வருகின்றனர். சேறுபூசி சண்டித்தனம் காட்டுவோர் சண்டியர்கள் இல்லை.

சண்டியன் யார் என்பதை நான் நன்கறிவேன். எனக்கு தெரிந்த வகையில் எமது நாட்டில் இரண்டே இரண்டு சண்டியர்களே இருந்தனர்.

அதிலொருவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். மற்றொருவர் ரோஹண விஜேவீர. அதற்கு அப்பால் சண்டியன்கள் இந்த நாட்டில் இல்லை.

பிரபாகரன் சண்டியன். அவர் என்னை கொல்வதற்கு முயன்றார். எனது உடலில் ஒரு பக்கத்தில் இரும்புத் துகள்கள் இருக்கின்றன.

விஜயவீர என்ற சண்டியனும் என்னை கொல்வதற்கு முயன்றார். அதனால் எனது உடலின் மற்றொரு பக்கத்தில் இரும்புத் துகள்கள் இருக்கின்றன. சண்டியன் இறந்து விட்டான். நான் உயிரோடு இருக்கின்றேன் என தெரிவித்தார். (2)

# சமூக சீரழிவுகளுக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன்

(யாழ்ப்பாணம்)

மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாட்டில் அமைதியான சூழல் நிலவிவரும் இந்தக் காலப் பகுதியில் மீண்டும் ஒரு ஆயுதக் கலாசாரம் தலை தூக்கியிருப்பது எமது இளம் சமூகத்தினர் மீண்டும் வழிதவறிப் போவதற்கான அத்திபாரமாகவே அமைந்துள்ளது.

இந்நிலைமை முடிவுக்கு கொண்டுவர அக்கறையுள்ள அனைவரும் முன்வரவேண்டும் என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த சில மாதங்களாக குடாநாட்டில் அரங்கேறிவரும் தனிப்பட்ட மற்றும் கூலிக்காக கொடூரமாக இடம்பெற்றுவரும் வாள்வெட்டு சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டியதோடு, முடிவு கட்டப்பட வேண்டியதுமாகும்.

இத்தகைய சமூக சீர்கேடான செயல்களையும் எமது மக்களை தேவையற்ற அச்சத்திற்குள்ளும் பதற்றத்திற்குள்ளும் தள்ளிவிடும் சம்பவங்கைளயும் தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வந்த வாள்வெட்டுச் சம்பவங்களின் தொடர்ச்சியாக அண்மையில் கோண்டாவில்– உரும்பிராய் பகுதி இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட குழுச்சண்டை ஒரு மாணவனின் படுகொலையாக முடிந்தமையானது எமது இளம் சமூகம் மீண்டும் தடம் மாறிச்சென்று கொண் டிருப்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்த நிலை தொடர்ந்து சென்றால் தமிழினம் கடந்த காலத்தில் கொடிய யுத்தத்தில் இழந்து போனவற்றைவிட அதிகமானவற்றை மறுபடியும் இழக்க நேரிடும்.

நீண்டகால போராட்டத்தால் நலிவுற்றுப்போன எமது மக்கள் இப்போதுதான் ஒருவாறாக தமது வாழ்வாதாரத்தில் மீண்டுகொண்டு வருகின்றனர். இந்த சூழ்நிலையில் சமூக சீர்கேடான இவ்வாறான செயல்கள் மீண்டும் ஒரு பேரழிவுக்கு நாம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்ச நிலை குடாநாட்டு மக்கள் மத்தியில தற்போது ஏற்பட்டுள்ளது மிக வேதனையான விடயமாகும்.

ஒரு காலத்தில் கலாசாரத்துக்கு பெயர் போன யாழ்ப்பாணம் இவ்வாறான சம்பவங்களால் இன்று தலைகீழாக மாறிவருவதை எவராலும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

தற்போது இந்தக் குழுச் சண்டியர்களை கட்டுப்படுத்த இராணுவம் தலையிடுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த நிலை தொடர்ந்தால் மீண்டும் குடாநாடு முழுவதும் இராணுவம் குவிக்கப்படும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது என்ற கவலை எமது மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் ஈடு செய்யமுடியாத இழப்புக்களைச் சந்தித்த எமது மக்கள் மீண்டும் ஒரு தடவை பாதிக்கப்படுவதற்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேண்டுகோளாக இருக்கின்றது.

அவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கு நாங்களும் உங்களுடன் கைகோர்த்துக் கொள்கின்றோம் எனபதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (2)




## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று நான்காம் நாள்

### என்னையும் காண்பாயா !

ஐந்து தலை நாகம் கொண்டு
கடல் நடுவே தனியாக
வீற்றிருக்கும் வீரத்தாயே!

உனைக் காண தினமும்
கடல் கடந்து வரும் பக்தர்களுள்
நானும் ஒன்று என்று நீ காண்பாயா!
நயினைக் குடிகொண்ட
நாகபூஷணி தாயே
எனக்கும் உன் வரம் வேண்டும்

எம்.சுபத்ரா (ஏழாலை)

### தாயே உனை வாழ்த்திடுவேன்

உன் புன் சிரிப்பே நம்மை
வரவேற்குதம்மா...
தடை பல வந்ததும் தாயாக தாங்கும்
அன்னையம்மா...
வெற்றிப் படிக்கு முன் நின்ற
வீர தேவியம்மா...
மழலையாக நம் மடியில் தவழும்
தவப்புத்திரியம்மா...
கடல் நடுவே நின் ஆட்சி புரியும்
விண்ணரசியம்மா...
பூ உலகை தாங்கும் உத்தமியாம்
பராசக்தியம்மா...

திருமதி. மதியழகன் புனிதமகள் (பொன்னாலை)

### அலை கடலின் நாயகியே !

அலை கடலை ஆட்சி செய்யும் அன்னையவள்
அரவமது குடை பிடிக்க அமர்ந்திருப்பாள்
அடியவரின் குறைகளினை களைந்தே விரட்டிடுவாள்
உன்னைக் கண்டால் எம் மனம் ஆறிடும் தாயே!

இ.தனலோஜன் (ஆனைக்கோட்டை)

### நயினை நாகபூஷணி தாயே...

நயினையிலே குடி கொண்டு
நலம் காக்கும் நயினை நாகபூஷணியே
உன்னைத்தேடி வரும் அடியார்க்கு
அருள்பொழியும் அமுதமே!

கடல் தாண்டி வரும் பக்தர் கோடியரின்
துன்பங்களை நீக்கும் நயினை தாயே
உன்னை தேடி வரும் பலநாட்டு
மக்களையும் காப்பவளே!

உன்கருவிழி பார்வையால் நீங்கும்
பல கோடி மக்களின் துயரங்கள்
மங்கையரின் மகிழ்வே
மாங்கல்யத்தை காக்கும் எம் தாயே!

அ.கபினா (யா/உரும்பிராய்
சை.த.வி. தரம் 10 B)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுங்கள்

## மோடிக்கு ஜெயா கடிதம்



(சென்னை)

இலங்கை கடற்படையிடம் சிக்கி உள்ள 28 மீனவர்களை விடுவிக்கவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ள 41 படகுகளை பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் நரேந்திரமோடிக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பில் தமிழக முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நான் தங்களுக்கு 19.6.2014 அன்று ஏற்கனவே கடிதம் அனுப்பி இருந்தேன். அதன் அடிப்படையில் 18.6.2014 அன்று இலங்கை கடற்படையினரால் பிடித்து செல்லப்பட்ட 46 தமிழக மீனவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த 23ஆம்திகதி இலங்கை படையினரால் பிடிக்கப்பட்ட 11 மீனவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

ஏற்கனவே விடுதலை செய்யப்பட்ட மீனவர்களுடன் படகுகளும் இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் கடந்த 29 ஆம் திகதி அதிகாலை இராமேஸ்வரத்தில் இருந்து சென்ற 17 மீனவர்களையும் அவர்களுடைய 3 விசைப்படகுகளையும் இலங்கை இராணுவம் சிறைபிடித்து சென்றுள்ளது. அவர்கள் தலைமன்னார் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதை உங்களுடைய கவனத்துக்கு கொண்டு வருகிறேன். அவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கிறேன்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவது, கடத்தப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது மீனவர்கள் மத்தியில் அசாதாரண நிலையை உருவாக்கி ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது. அதுமட்டுமல்லாமல் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு அவர்களுக்கு மீன்பிடி தொழில் அதிகரித்து வரும் ஆபத்தான தொழிலாகவும் மாறி இருக்கிறது.

நான் ஏற்கனவே அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் நீங்கள் இது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுப்பீர்கள் என கருதுகறேன். பாக்ஜலசந்தி தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் வரலாற்று ரீதியான இடமாகும்.

அந்த இடத்தை சர்வதேச கடல் எல்லையாக இந்திய அரசு கருதக்கூடாது. கச்சதீவு இந்தியாவுக்கு சொந்தமானது.

அது இலங்கைக்கு வழங்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு உயர் நீதி மன்றில் நிலுவையில் உள்ளது.

இதுசம்பந்தமாக தாங்கள் ராஜ்ய ரீதியாக உடனடி நடவடிக்கை எடுத்து ஏற்கனவே இலங்கையில் உள்ள 11 மீனவர்கள்; 38 படகுகள் உள்ளிட்ட 28 மீனவர்களையும், 41 படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என கடிதத்தில் ஜெயலலிதா கூறியுள்ளார். (2)



நயினாதீவு மணிபல்லவ மண்டப புனரமைப்பிற்காக ஆளுநர் நிதியிலிருந்து 6 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா காசோலையினை அன்பளிப்பாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நயினாதீவு பிரதம குருக்களிடம் அண்மையில் ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கியதை படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

## இலங்கை அகதி மரணம்; உறவினர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இந்தியாவில், இலங்கை அகதியொருவர் வைத்தியசாலையில் உயிரிழந்தமையினால் அவரது உறவினர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டதாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

அகதியான சந்திரசேகரனுக்கு (வயது 29) திடீரென்று ஏற்பட்ட வயிற்று உபாதை காரணமாக பாண்டிச்சேரி மருத்துவ அறிவியல் நிலையத்தில்,உறவினர்கள் அவரை அனுமதித்துள்ளனர்.

அனுமதிக்கப்பட்ட நேரத்தில் தலைமை வைத்தியர் கடமையில் இல்லை என்பதனால் வைத்தியசாலையில் கடமையாற்றும் பணியாளர்கள் அவருடைய வயிற்று வலியை குறைப்பதற்காக மருந்து ஊசி ஒன்றை ஏற்றியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து வயிற்று வலி அதிகரிக்க, தாங்கமுடியாத நிலையில் அவர் கத்தியுள்ளார். இது தொடர்பில் அவரது உறவினர்கள் வைத்தியசாலை பணிப்பாளரிடம் உடனடியாக தெரிவித்துள்ளனர்.

ஈ.சி.ஜி சோதனைகள் செய்யும் போதே அவர் உயிரிழந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து அவரது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் சுற்றத்தார் உட்பட சுமார் 150 பேர் வரை ஒன்றிணைந்து வைத்தியசாலை நிர்வாகத்தை எதிர்த்து ஆர்ப்பட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

## மொழி தொடர்பில் இலங்கையுடன் பணியாற்ற கனடாவுக்கு விருப்பம்

மொழி தொடர்பில் இலங்கையுடன் சேர்ந்து பணியாற்ற கனடா விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள சகல மக்களும் அரச திணைக்களங்களில் இருந்து சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும் சேவையைப் பெறுவதற்காக உறுதிப்படுத்தும் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பில் இலங்கையுடன் சேர்ந்து கனடா பணியாற்றவுள்ளது.

கனடாவின் 147 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கனடா உயர்ஸ்தானிகர் வைட்டிங் செல்லி வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒவ்வொரு வருடமும் கனடா உலக நாடுகளிலிருந்து சுமார் 3 இலட்சம் புதிய குடிவரவாளர்களை உள்வாங்குகின்றது. அனைவரும் பங்களித்துள்ள எமது நாட்டின் பல்வகைமை குறித்து கனேடியர்கள் பெருமை கொள்கிறார்கள்.

இலங்கையைப் போன்று கனடாவும் ஒன்றுக்கு மேற்பட்ட உத்தியோக பூர்வ மொழிகளைக்கொண்டுளளது. கனடாவில்ஆங்கிலமும் பிரெஞ்சும் பரவலாப் பேசப்படுகின்றன.

இலங்கையையும் கனடாவையும் பொறுத்தவரை எமது வர லாற்றையும் எமது சமூகத்தோடு கலந்துள்ளவர்களின் தனித்துவ அடையாளங்களையும் அங்கீ கரிப்பதற்காகவே பல உத்தியோக பூர்வ மொழிக்ளைக் கொண்டிருக்கின்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் உள்நாட்டு முயற்சியான கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நல்லிணக்கத்துக்கான முக்கிய மூலக்கூறாக மொழிச் சமத்துவத்தை அங்கீகரித்துள்ளது.

எனவே மொழி தொடர்பில் இலங்கையுடன் சேர்ந்து பணியாற்ற கனடா விருப்பம் தெரிவித்துள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொழில் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் அலுமினியம் கட்டுமான மற்றும் வானொலி, தொலைக்காட்சி திருத்துதல் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி அறிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை கரவெட்டி பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி பயிற்சி நெறியினை பூர்த்தி செய்பவர்கள் (NVQ) தரத்திலான சான்றிதழினை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிவுத்துயர் பகிர்வு

### கணபதிப்பிள்ளை அருணாசலம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மாசவன் சந்தி, நீர்கொழும்பு கடல் வீதி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அருணாசலம் (சிறாப்பர்-ஓய்வு பெற்ற மாநகர சபை காசாளர்-யாழ்,நீர்கொழும்பு) கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கார்த்திகேசு நடராஜா



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராஜா கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு La Maison Funeraire 7,BdMenilmontant,75011,Paris, France(Mo Philippe Auguste) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### இராயப்பு பாக்கியநாதர்



பலாலி,தொட்டுவையைப் பிறப்பிடமாகவும் இல.29,வேம்படி வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு பாக்கியநாதர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று புனித அடைக்கல அன்னை தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்த போராட்டத்தில் வவுனியா நகர சபை ஊழியர்கள்



வவுனியா நகரசபையில் வேலை நிறுத்தம் செய்யப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது உட்பட 12 கோரிக்கைகளை முன் வைத்து நகர சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் ஆதரவுடன் இடம்பெறும் இப் போராட்டத்தில் வவுனியா நகரசபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சுகாதார தொழிலார்களில் 7 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும், வட மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஆளணி அதிகரிக்கப்பட வேண்டும், வவுனியா நகரசபையால் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட காவல் கடமை பதவிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், உள்ளக வெற்றிடங்கள் உள்ளக தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும், 30 வருடங்களாக பணியாற்றுபவரகளுக்கு இதுவரை தர உயர்வு வழங்கப்படாமையினால் அரச சுற்றுநிருபம் 01- 2001 இற்கு அமைவாக தரமுயர்த்தல் வழங்கப்படவேண்டும், வேறு திணைக்களங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும், தொழிலாளர்களுக்கு சாப்பாட்டறை கட்டிக் கொடுககப்படவ்வேண்டும்.

மேலும் தொழிலாளர்களுக்கான மலசலகூடம் புனரமைப்பு செய்து தரப்படவேண்டும். அந்தந்த இடங்களில் பணிபுரிபவர்கள் அங்கேயே பணி புரிவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். சுகாதார பகுதி நலன் புரிச்சங்கத்திற்கு நகரசபையால் சலுகைகள் வழங்கப்பட வேண்டும. உமா எனப்படும் சுகாதார தொழிலாளியை தொழிலாளிகளுடன் பணியாற்ற அனுமதிக்க வேண்டும, வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் சுகாதார தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கப்படவேண்டும் போன்ற 12 கோரிக்கைகளை முன்வைத்து இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன். ஆர். இந்திரராஜா ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சில மணி நேரங்கள் அமர்ந்திருந்து கலந்துரையாடியருந்தனர்.

இப் போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன்,

வவுனியா நகரசபையில் பணியாற்றி வந்த தற்காலிக சமயாசமய ஊழியர்கள் 52 பேர் இருந்தனர். அவர்களில் 45 பேருக்கு வட மாகாண முதலமைச்சரினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 7 பேருக்கு ஆளணி அங்கீகாரம் இல்லை என்ற காரணத்தை காட்டி பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை வட மாகாணத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் உள்ள ஊழியர்களின் பதவி உயர்வு மற்றும் ஏனைய விடயங்களையும் வலியுறுத்தி வருகின்றோம். எனவே இப் போராடடத்தை வடமாகாணத்திற்கு விஸ்தரிப்பதற்கு தீர்மானித்துள்ளோம் என தெரிவித்தார்.

இந் நிலையில் இப் போராட்டத்தை தாம் தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளதாக அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் ஆர். சித்திரன் தெரிவித்தார்.(9-250)

## சங்காபிஷேகம்

(பூநகரி)

பூநகரி மட்டுவில் நாடு அருள் மிகு பத்தினியார் காடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹா சங்காபிஷேக நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய் காலை இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் தா.அரியரத்தினம் அறிவித்துள்ளார்.

கடந்த வருடமஹாகும்பாபிஷேகம் நடைபெற்ற நாளில் இடம் பெறவுள்ள சங்காபிஷேகக் கிரியைகளை எஸ்.விசுவநாதக் குருக்கள் நடத்தி வைக்கவுள்ளார். (9-84)




## ஒன்றுகூடல்

கிளி.பூநகரி மத்திய கல்லூரியின் உயர்தர மாணவ மன்றத்தின் ஒன்று கூடல் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மன்றத் தலைவர் இ.நிதர்ஷன்தலைமையில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அகேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9-84)





முல்லைத்தீபனின் கடவுளிடம் சில வேள்விகள் எனும் கவிதை நூலின் அறிமுக விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச உதவி பிரதேச செயலர் குருபரன் மங்கல விளக்கேற்றுவதையும் ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார நூலின் முதற்பிரதியை கவிஞர் சமரபாகு சீனா உதயகுமாரிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

### பூநகரி வைத்தியசாலையில்

# போதிய வசதிகளின்மையால் நோயாளர்கள் வெளியேற்றம்

பூநகரி அரசினர் வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் போதிய வசதிகளின்மையால் வெளியேற்றப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இவ் வைத்தியசாலையின் புதிய கட்டடம் அண்மையில் திறந்து வைக் கப்பட்டு நோயாளர்கள் கவனிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில், இங்கு ஒரு வைத்தியர் மாத்திரமுள்ளதனால் இன்னொரு வைத்தியர் கடந்த வாரம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இந் நிலையில், வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெற்று வந்த பத்திற்கும் மேற்பட்ட நோயாளர்கள் வசதிகள் இல்லையென காரணம்காட்டி வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதனால் இப்பிரதேசத்திலுள்ள நோயாளர்கள் பிறபகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

எனவே, குறித்த வைத்தியசாலைக்கு போதுமான வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்து பிரதேச மக்கள் திருப்திகரமான வைத்திய சேவைகளை பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-84)

# பொதுச் சந்தைக்கு புதிய கட்டடம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட மாங்குளம் பொதுச் சந்தைக்கான புதிய கட்டடத்தொகுதி வேலைகள் இம்மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேச சபைச் செயலாளர் எஸ்.மிதிலைநாதன் தெரிவித்துள்ளார்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் 55 மில்லியன் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இச்சந்தையானது 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தால் முற்றாக அழிவடைந்த நிலையில், 2000 ஆம் ஆண்டு இச் சந்தைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு, சந்தை நடவடிக்கைகள் இடம் பெற்றிருந்தன. எனினும், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது மீண்டும் இச் சநதைக் கட்டடம் அழிவடைந்துள்ளது.

2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாங்குளம் பகுதியில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து சந்தை நடவடிக்கைக்கு கட்டடம் இல்லாமையால் இச்சந்தை இயங்காதிருந்தது. தங்களுடைய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக சந்தை அமைத்துத் தருமாறு உள்ளூர் உற்பத்தியாளர்கள் புதுகுடியிருப்பு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் அவர் கூறினார். கட்டடம் அமைக்கும் பணிகள் இவ்வருட இறுதிக்குள் முடிவடைந்து சந்தை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-250)

# கிளி.பொதுச்சந்தையின் வர்த்தகர்களுக்கு நிரந்தர கடைத்தொகுதிகள் வழங்குக

வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொதுச் சந்தையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக சென்றிருந்தனர்.


இதன்போது கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்களின் கோரிக்கை அடங்கிய மகஜரொன்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் வழங்கப்பட்டது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிவடைந்த பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள் குடியேற ஆரம்பித்தனர். இந்நிலையில், கிளிநொச்சி பொதுச் சந்தை ஆரம்பத்தில் காக்கா கடைச் சந்தியில் அமைக்கப்பட்டு பின்னர் அம்பாள் குளம் பகுதியில் அமைக்கப்பட்டது.

எனினும், அமைவிடம் பொருத்தமற்றதாக அம்பாள் குளம் பகுதி காணப்பட்டமையால் வர்த்தகர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, வர்த்தகர்களின் வேண்டுகோளிற்கிணங்க ஏ-9 பிரதான வீதியை அண்டிய பகுதியில் முன்னர் அமையப் பெற்ற பழைய பொதுச் சந்தை வளாகத்தினுள் சந்தை அமைப்பதற்கான அடிக்கல் கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் நாட்டி வைக்கப்பட்டது.



இதன்பிரகாரம் மீன், மரக்கறி வியாபாரத்திற்கான நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்பட்டு கடந்த 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

எனினும் பொதுச் சந்தையினுள் இடம்பெற்று வரும் ஏனைய வியாபார நடவடிக்கைகளான புடைவை, பல்பொருள், அழகுசாதனம், வெற்றிலை, தேநீர், தேங்காய், பழவகை, மட்பாண்டம், புத்தகசாலை, மருந் தகம், தையலகம் ஆகியவற்றுக்கான நிரந்தர கடைகள் அமைக் கப்படவில்லை.

இந்நிலையில் இவர்களுக்கான தகரங்களிலான தற்காலிக கடைகள் கடந்த 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரால் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டன. தற்போது ஒரு வருடம் கடந்து விட்டதனால் கடைகள் சேதமடைந்துள்ளன.

அத்தோடு, இக் கடைகள் வியாபாரத்திற்கு ஏற்ற சூழலில் அமைக்கப்படாமையினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதனால் குறித்த வியாபாரிகளுக்கான நிரந்தர கட்டடத்தை அமைத்து தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (9-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் பெருமையும் சிறுமையும் அவனவன் இதயத்துக்குள் இருக்கின்றன
- சீனப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிங்கக்குட்டிமீது காட்டிய இரக்கத்தை தமிழர்மீது காட்டத்தவறிய பான் கீ மூன்

கென்யா நாட்டில் உள்ள தேசிய பூங்காவில் அநாதரவாகத் திரிந்த ஆறுமாத பெண் சிங்கக் குட்டி ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தத்தெடுத்து, அந்த நாட்டில் உள்ள வனவிலங்குக் காப்பகத்தில் ஒப்படைத்தார் என்ற செய்தி உலக ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

அநாதரவாகத் திரிந்த சிங்கக் குட்டி மீது பான் கீ மூன் இரக்கம் கொண்டமை வரவேற்கத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபை என்பது தனித்து மானிடத்தின் நலன் பேணும் அமைப்பு மட்டுமல்ல; அது ஜீவகாருணியம் மிக்க அமைப்பு என்பதை நிரூபிப்பதாகவும் பான் கீ மூனின் மேற்குறித்த செயல் அமைந்துள்ளதெனப் பொருள் கொள்ளலாம்.

அநாதரவாகத் திரிந்த சிங்கக்குட்டியை தத்தெடுத்த ஐ.நா செயலர் பான் கீ மூன், இலங்கையில் சிங்கத்திற்கும் புலிக்கும் நடந்த சண்டையில் அநாதரவாகிப்போன அப்பாவித் தமிழ்க் குழந்தைகளை– சிறுவர்களை மறந்து போனமை; காப்பாற்றத் தவறிப் போனமை ஏன்? என்பது தான் தெரியவில்லை.

சிங்கக்குட்டி மீது காட்டிய இரக்கத்தை அவர் இலங்கைத் தமிழ்க் குழந்தைகள் மீதும் காட்டியிருப்பாராயின் எத்தனையோ குழந்தைகள் இன்று தங்கள் பெற்றோர்களுடன் தத்தம் வீடுகளில் வாழ்ந்திருப்பர். வாழவேண்டிய எத்தனையோ குழந்தைகள் போர் சூழ்ந்த மண்ணில் பாதுகாக்கப்பட்டிருப்பர்.

ஆம், இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்திய வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பலியாகிப் போயினர்.

யுத்த காலத்தில் தங்களைக் காப்பாற்றுமாறு, சர்வதேச தொண்டு நிறுவனங்களிடம் தமிழ் மக்கள் கையேந்தி–மன்றாடி நின்ற வேளை, ஓட்டமும் நடையுமாக அந்த அமைப்புகள் வன்னியை விட்டு; தமிழ் மக்களை அந்தரிக்க விட்டு சென்றதை எங்ஙனம் மறக்கமுடியும்?

அன்று பான் கீ மூன் ஈழத்தமிழர்கள் மீது சிறு கவனம் செலுத்தியிருந்தால்–இரக்கம் கொண்டிருந்தால் இன்று எத்தனையோ தமிழ்க் குடும்பங்கள் கண்ணீரும் கம்பலையுமாக வாழும் பரிதாப நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது.

இலங்கை விடயத்தில் ஐ.நா சபை தவறிழைத்து விட்டது என்று கூறி தனது பொறுப்பான பதவியை பொறுப்பற்றதாக்கிய பான் கீ மூன் சிங்கக் குட்டி மீது இரக்கம் காட்டியதுதான் இப்போது பெரும் அதிசயம்.

எதுவாயினும் சில தலைவர்கள், காலநேரம் அறிந்து தங்கள் உதவியை –பரோபகாரத்தை செய்வார்கள். ஆனால் இன்னும் சிலரோ செய்ய வேண்டியது இருக்க, செய்யத் தேவையில்லாத வேலையில் தங்களை நுழைத்து அதற்கூடாக தாங்கள் விட்ட தவறை திசை திருப்ப–சரிப்படுத்த முற்படுவார்கள்.

இலங்கையில் நடந்த வன்னிப் போரில் தமிழ் மக்களைக் காப்பாற்றத் தவறிய பான் கீ மூன், சிங்கக்குட்டி மீது இரக்கம் கொண்டது கூட மேற்குறிப்பட்டது போல தவறைத் திசை திருப்பும் வகுதியைச் சார்ந்ததாக இருக்கலாம்.

# வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான பொலிஸ் பாதுகாப்பை மீள வழங்குங்கள்

### ஜனாதிபதிக்கு அவைத் தலைவர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பொலிஸ் பாதுகாப்பு மீள வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தினால் நேற்று திங்கட்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு 11 அமர்வுகள் நிறைவடைந்துள்ள நிலையில் ஜனாதிபதிக்கு முதன்முறையாக அவைத் தலைவரினால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் வடக்கு மாகாண சபையின் நான்கு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவந்த பொலிஸ் மற்றும் எம்.எஸ்.டி பாதுகாப்பு மீளப்பெறப்பட்டுள்ளது. அப்பாதுகாப்பினை மீளவழங்குவதோடு பொலிஸ் பாதுகாப்பு வழங்கக்கோரும் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பினை பெற்றுக்கொடுக்க மாகாண சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு பேரவை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் நாம் எழுதிய 03.04. 2014-ம் திகதிய கடிதங்களில் வடக்கு மாகாண சபையின் 38 உறுப்பினர்கள் அனைவருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு நான் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

மேற்குறிப்பிட்ட கடிதத்தின் அடிப்படையில் உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு வழங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில் பா.கஜதீபன், அனந்தி சசிதரன் மற்றும் சு.சுகிர்தன் ஆகியோருக்கு அவர்களின் வேண்டுகோள்களின்படி பொலிஸ் பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

இருப்பினும் கடந்த 26-ம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வின் போது மேற்படி உறுப்பினர்கள் தாங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு திடீரென மீளப் பெறப்பட்டுள்ளன என முறையிட்டுள்ளார்கள். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வடக்கு மாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனக்கு வழங்கப்பட்டிருந்த (எம்.எஸ்.டி) பாதுகாப்புச் சேவையும் மீளப் பெறப்பட்டுள்ளதாக முறையீடு செய்துள்ளார்.

இம் முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு தங்களுக்கு இவ்விடயத்தினை முன்னிலைப்படுத்துவதற்கும் அத்துடன் தங்களுக்கும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் இதனைச் சமர்ப்பித்து குறிப்பிட்ட உறுப்பினர்கள் நால்வருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வசதிகளை மீளப்பெற்றுக் கொடுக்கக் கோருவதெனவும் ஏனைய உறுப்பினர்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் பட்சத்தில் அவர்கள் எல்லோருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கக் கோருவதெனவும் வடக்கு மாகாண சபை தீர்மானித்துள்ளது என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## வாக்குமூலங்களில் பொலிஸார் பலவந்தமாகக் கையொப்பம் பெற்றனர்

### ஜெனரல் ஜானக கொலைச் சந்தேக நபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸார் பலவந்தமாக வாக்குமூலங்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டதாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அப்துல் அமீட் உமார் தெரிவித்துள்ளார்.

வடமத்திய மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட வர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கும் எனக்கும் தொடர்பில்லை. குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட காலத்தில் நான் அனுராதபுரத்தில் இருக்கவேயில்லை. இது போலியான குற்றச்சாட்டு. சம்பவம் இடம்பெற்று சில வாரங்களின் பின்னர களுபோவில பிரதேசத்தில் வைத்து என்னை கைது செய்தனர். கைது செய்தவர்கள் பொலிஸ் சீருடையில் இருக்கவில்லை.

பின்னர் வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்று ஒன்பது நாட்கள் தடுத்து வைத்திருந்தனர். தடுத்து வைத்து என்னைக் கடுமையாக தாக்கினர். பணம் கொடுத்தால் விடுதலை செய்வதாகத் தெரிவித்தனர்.

பாரியளவில் பணம் வழங்குமாறு அவர்கள் என்னிடம் கோரினார்கள். ஆரம்பத்தில் இவர்களை ஓர் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கருதினேன். பணம் இல்லையென்று சொன்னேன். அப்படியென்றால் சிறைக்கு செல்ல நேரிடும் என அவர்கள் எச்சரித்தனர் என சந்தேக நபர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு என்றால் குறித்த காலப் பகுதியில் வங்கிக் கணக்கிற்கு எவ்வாறு பாரியளவில் பணம் கிடைத்தது என சட்டத்தரணி கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் போது, வாசனைத் திரவிய வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகவும், இதன் மூலம் பாரியளவு பணம் தமது வங்கிக் கணக்கிற்கு கிடைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை பொலிஸார் தாக்கவில்லை. பலவந்தமாக கையொப்பம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என எதிர்த்தரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இது தொடர்பான வழக்கு விசாரணை அனுராதபுர நீதிமன்றில் நடைபெற்ற போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சந்தேக நபரை எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-11)

## சைவ அபிவிருத்தி கழகத்தின் குருபூசையும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் மாணிக்க வாசகர் சுவாமிகள் குருபூசையும், கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற திருமுறை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலய மண்டபத்தில் இரா. செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மதுரா மாளிகை முதல்வர் த.சற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்கமைய முதல் மூன்று இடங்களையும் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளது. தரம் 1 இற்கான பாலர் பிரிவில் முதலாம் இடம் உ.யாகினி (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), இரண்டாம் இடம் கு.யுகானா (யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை), மூன்றாம் இடம் சு.கீர்த்தனா (யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), தரம் 2 இற்கான பாலர் பிரிவில் முதலாம் இடம் ம.மதுவந்தி (யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), இரண்டாம் இடம் ஸ்ரீ சர்வஜித் (யா/இந்து ஆரம்ப பாடசாலை), மூன்றாம் இடம் தே.கபிசாயினி (யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலம்), தரம் 3 இற்கான கீழ்ப்பிரிவில் முதலாம் இடம் பா.ஜிந்துஜன் (யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), இரண்டாம் இடம் சி.சிரோசினி (யா/இந்து ஆரம்ப பாடசாலை) மூன்றாம் இடம் ப.அக்சயா (யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்), தரம் 4 இற்கான கீழ் பிரிவில் முதலாம் இடம் சு.அனுஷிகா (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), இரண்டாம் இடம் வ.ஆர்த்திகா (யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாட சாலை த.நிருசியா (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோர் முதல் மூன்று இடங்களை வெற்றி பெற்றதுடன் சிறப்பு பரிசில்கள் 20 மாணவர்கள பெற்று கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சைவ அபிவிருத்தி கழகம் வண்ணை சாந்தை மடம் பரீட்சைச் செயலரும் சமயப் பிரசாரகருமான சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (செ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### விதியை நீயே வகுக்கலாம்



- நாம் நம்மைப் பற்றி எண்ணாத நேரத்தில் மட்டுமே உண்மையான வாழ்க்கையை அனுபவிக்கிறோம்.
- ஆற்றல் மிக்க மனிதர்கள் தங்களுக்குரிய விதியை தாங்களே வகுத்துக் கொள்கிறார்கள்.
- சுதந்திரமான நிலையில் மட்டுமே அன்பு முழு அளவில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.
- எந்தப் பணியில் ஈடுபட்டாலும், அதை உயர்ந்த வழிபாடாக எண்ணிச் செய்யுங்கள்.
- அன்பும், வெறுப்பும் புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் வந்து சேரும் ஆற்றல் படைத்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி நிமிட கோல்களால் மெக்சிக்கோவை வீழ்த்தி திரில் வெற்றியுடன் காலிறுதியில் நெதர்லாந்து



உலக கிண்ண காற்பந்து போட்டியில் நெதர்லாந்து அணி திரில் வெற்றியுடன் காலிறுதிக்கு முன்னேறியது.

பிரேசிலில் உலக கோப்பை காற்பந்து தொடர் நடக்கிறது. நேற்று நடந்த நொக் அவுட் போட்டியில் நெதர்லாந்து மற்றும் மெக்சிகோ அணிகள் மோதின.

ஆரம்பத்தில் நெதர்லாந்து அணியின் ராபின் வான் பெர்சி, ரொபன் உள்ளிட்ட வீரர்கள் தாக்குதல் நடத்தினர். இதனை மெக்சிகோ கோல்கீப்பர் கிலர்மோ ஓச்சோ துடிப்பாக தடுக்க, கோல் அடிக்க முடியவில்லை.

இரண்டாவது பாதியில் துடிப்பாக ஆடிய மெக்சிகோவுக்கு 48 ஆவது நிமிடத்தில், ஜியோவானி டாஸ் சான்டோஸ் மிக நீண்ட தூரத்தில் இருந்து துல்லியமாக கோல் அடித்தார். இதையடுத்து மெக்சிகோ 1:0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி முடியும் தறுவாயில் 88 ஆவது நிமிடத்தில் கார்னர் வாய்ப்பில் ரொபன் அடித்த பந்தை ஹன்டலார் தலையால் முட்டினார். இதை பெற்ற நெதர்லாந்தின் வெஸ்லி ஸ்னைடர் சுப்பராக கோல் அடிக்க, ஆட்டம் 1:1 என சமநிலையை எட்டியது.

பின் 'ஸ்டாபேஜ்' நேரத்தில் நெதர்லாந்தின் ரொபனை, மெக்சிகோவின் மார்க்கஸ் வீணாக மடக்கினார்.

இதையடுத்து 'பெனால்டி' வழங்கப்பட்டது. இதில், ஹன்டலார் (90 + 4) ஆவது நிமிடத்தில் சுலபமாக கோல் அடிக்க, நெதர்லாந்து அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. (க)

# இன்றைய ஆட்டங்கள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தும்பளை கருணை உள்ளம், விண்மீன் நற்பணி மன்ற அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி வல்வை றெயின்போ மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதன் பின்னர் பிற்பகல் 4.30 மணிக்கு உதயதாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலட்டி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வரலாற்று சிறப்பு வாய்ந்த வெற்றியுடன் கொஸ்டாரிகா




உலக கோப்பை காற்பந்து தொடரின் நொக் அவுட் சுற்றில் கிரீஸ் அணியை எதிர்கொண்ட கொஸ்டாரிகா வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக தொடங்கிய ஆட்டத்தின் முடிவு நேரமான 90 ஆவது நிமிட நிலவரப்படி, இரு அணிகளும் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன. பின்னர் அளிக்கப்பட்ட கூடுதல் நேரத்தில் தங்கள் நாட்டின் சார்பில் இரண்டாவது கோலினை பதிவு செய்ய இரு அணிகளுமே அசுர முயற்சி மேற்கொண்டதால் பார்வையாளர்களிடையே பரபரப்பு தொற்றிக் கொண்டது.

கோல் வலையை நோக்கி திரும்பிய பந்தை மேற்கொண்டு முன்னேற முடியாமல் தடுத்து நிறுத்துவதில் இரு அணிகளுமே மும்முரம் காட்டியதால் இரண்டாவது கோலினை எய்த முடியாமல் கூடுதல் நேரமும் முடிவடைந்த நிலையில் 'பெனால்டி ஷூட்' மூலம் இரு அணிகளுக்கும் தலா 5 வாய்ப்புகள் அளிக்கப்பட்டன.

பெனால்டி ஷூட்டில் இரு அணிகளும் 3:3 என்ற சமநிலை வகித்த போது கிரீஸ் வீரர் புனிஸ் கெகாஸ் அடித்த கோலினை எதிர் அணி கோல் கீப்பர் தடுத்து வெளியே விரட்டினார். இதனையடுத்து, கொஸ்டாரிகாவின் மைக்கேல் உமனா உதைத்த ஐந்தாவது பந்து படு இலாவகமாக வலைக்குள் பாய, பெனால்டி ஷூட் முறையில் 5:3 என கிரீஸை வீழ்த்தி கொஸ்டாரிகா வெற்றி பெற்றது.

இந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த வெற்றியின் மூலம் உலகக் கோப்பை காற்பந்து போட்டிகளில் முதன்முறையாக காலிறுதிக்குள் நுழையும் கொஸ்டாரிகா நெதர்லாந்து அணியை எதிர்கொள்கிறது. (க)

# புட்சால் காற்பந்தாட்ட போட்டி; இளவாலை ஹென்றியரசர் சம்பியன்



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்திய அணிக்கு 5 பேர் கொண்ட "புட்சால்" காற்பந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் விலகல் முறைப்படி இடம்பெற்றதுடன் இச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவின் 8 காற்பந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தன.

முன்னதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் இளவாலை ஹென்றியரசர் அணி 3:2 என்ற கோல்கள் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினையும், ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் அணி 3:1 என்ற கோல்கள் கணக்கில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியினையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன. இறுதிப்போட்டியில் இளவாலை ஹென்றியரசர் அணி 3:0 என்ற கோல்கள் கணக்கில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி அணியினை வீழ்த்திச் சம்பியனாகியது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3:1 என்ற கோல்கள் கணக்கில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியினை வென்றது.

# மத்திய கல்லூரி வெற்றி

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தினால், யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுத் துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் துடுப்பாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 116 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

மேற்படி சுற்றுப்போட்டியானது 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டியாக நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி பி அணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் என்.திரேசன் 79, எஸ்.அலன்ராஜ் 72, கே.கார்த்தீபன் 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக ஏ.தேவகுமாரன், என்.டினோசன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

242 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 34.3 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் என்.டினோசன் 35 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக கே.கார்த்தீபன், எம்.கௌதமன் தலா 4 இலக்குகளை கைப்பற்றினார்கள். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org


# இந்திய அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக டிராவிட் நியமனம்



இந்திய கிரிக்கெட் அணி இம மாதம் இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து 5 டெஸ்ட் போட்டி களிலும், 5 ஒரு நாள் போட்டிகளி லும் ஒரு இருபது -20 போட்டியிலும் விளையாட உள்ளது.

அதில் டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணியின் துடுப்பாட்ட ஆலோ சகராக முன்னாள் இந்திய கப்டனான ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டிருக் கிறார். இந்திய அணியின் பயிற்சியா ளராக உள்ள டங்கன் ப்ளட்சர், கிரிக் கெட் சபையை தொடர்பு கொண்டு மிகுந்த அனுபவம் உள்ள டிராவிட் அணி வீரர்களுக்கு ஆலோசனை வழங்கினால் சிறப்பாக இருக்கும் என கேட்டுக்கொண்டதை தொடர்ந்து டிராவிட் இப்பொறுப்பில் நியமிக்கப்ப ட்டுள்ளதாக பி.சி.சி.ஐயின் செயலா ளரான சஞ்சய் படேல் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணியிலி ருந்து ஓய்வுபெற்ற பின், இந்திய அணியின் முக்கிய பொறுப்பை டிராவிட் ஏற்க உள்ளது இதுதான் முதன் முறை யாகும். இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவானான சுனில் கவாஸ்கர் கட ந்த மார்ச் மாதம் இந்திய அணியின் பயிற்சியாளராக டிராவிட்டை நியமிக்க வேண்டும் என்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# இங்கிலாந்து பயிற்சி போட்டியில் இஷாந்த் மோசமான பந்துவீச்சு

## ரசிகர்கள் கிண்டல்!

இங்கிலாந்து பயிற்சி ஆட்டத்தின் போது மோசமாக பந்துவீசிய இஷாந்த் ஷர்மா ரசிகர்களின் விமர்சனங்க ளுக்கு உள்ளாகியுள்ளார்.

இங்கிலாந்தின் தொடக்க வீரராக இருக்கும் அவுஸ்திரேலியாவின் சாம் ரொப்சனின் சகோதரர் ஆங்கஸ் ராப் சன் மற்றும் கிரெக் ஸ்மித் ஆகிய இரு வரும் இஷாந்த் ஷர்மா, புவனேஷ் குமார் ஆகியோரின் பந்து வீச்சாளர்க ளைப் புரட்டி எடுத்தனர்.

இருவரும் அதிவேகமாக 221 ஓட் டங்களை சேர்த்தனர். குறிப்பாக இஷா ந்த் சர்மாவை ஜாகீர் கான் இல்லாத போது இந்தியாவின் பவுலிங் அணித் தலைவர் என்றனர். ஆனால் இவர் மோசமான பந்து வீச்சையே வீசினார்.

முதல் 4 ஓவர்களிலேயே 40 ஓட்ட ங்களுக்கு மேல் விட்டுக் கொடுத்தார். இதன்மூலம் ரொப்சனும் ஸ்மித்தும் இணைந்து 30 ஓவர்களில் 178 ஓட்டங்களை விளாசினர்.

இதனால் ரசிகர்கள் அவரை கடும் கேலி செய்ததாக செய்திகள் வெளி யாகியுள்ளது. இவர் ஃபீல்டிங் செய்ய பவுண்டரி அருகே சென்றபோ தெல் லாம் அவரைப் பார்த்து சில ரசிகர்கள் முதுகை வளை, நல்ல முயற்சி செய் என்று அறிவுரை கூறினர். அதே போல் எவ்வளவு பவுண்டரிகளை நீ இந்த ஓவரில் கொடுக்கப்போகிறாய் என்று ரசிகர்கள் சத்தம் போட்ட தாகவும் இங்கிலாந்து ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கடைசியில் அவர் 2 விக்கெட்டுகளை மட்டும் வீழ்த் தினார். (க)



# நெய்மர் வலையில் மொடல் அழகிகள்



பிரேசில் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் நெய்மர் கால்பந்து களத்தில் மட்டுமல்லாமல் காதல் விவகாரங்களிலும் கில்லாடியாக விளங்குபவர்.

இந்த உலகக் கிண்ணப் போட்டி யில் தனது அதிரடி ஆட்டத்தால் அணியை கிண்ணத்தை நோக்கி கொண்டு செல்கிறார். இவர் மொத் தம் 4 கோல்கள் அடித்துள்ளார்.

இவருக்கு உலகமெங்கும் பல ரசிகர்கள் உள்ளனர். இதுவரை நெய்மர் 3 பெண்களை தன் வலை யில் விழச்செய்துள்ளார்.

அந்த வகையில் முதலில் சிக்கி யவர் 19 வயதான பிரேசில் மொடல் கரோலினா டான்டாஸ்.

இருவருக்கும் நெருக்கம் அதிக மானதன் விளைவாக 2011-ல் ஒரு மகனை பெற்றெடுத்தார் டான்டாஸ்.

அப்போது இதுபற்றி நெய்மர் கூறுகையில், நான் அப்பாவான செய்தியை கேட்டு பயத்தில் அழுது விட் டேன். புதிய பொறுப்பு வந்துள்ளது என்று கூறினார்.

சிறிது நாட்களில் டான்டாஸை கழற்றி விட்டு, பிரேசில் நடிகை புருனா மார்கிசின் பக்கம் தாவி னார் நெய்மர். இந்த காதலும் அதிக நாட்களுக்கு நீடிக்கவில்லை.

கடந்த பெப்ரவரியில் இருவரு க்கும் இடையிலான உறவில் விரி சல் ஏற்பட்டது. ஆனாலும் நெய்மர் மனம் உடைந்து போகவில்லை.

பிரேசிலின் சுப்பர் மொடல் காப்ரிய ல்லா லென்சிக்கு வலை விரித்தார்.

பின்னர் இருவரும் ஒன்றாக ஊர் சுற்றிய நிலையில், அதிரடி மாற்றம் அரங்கேறியது. அதாவது, உலகக் கிண்ண தொடரின் போது நெய்மர் அறையில் பழைய புருனா மார்கிசினை காண முடிந்தது.

இருவரும் சேர்ந்து மொபைல் போன் மூலம் எடுத்துக் கொண்ட படங்கள் சமூகவலை தளங்களில் வெளியாகின.

இதனால் நெய்மர் மனதில் இருப்பது புருனாவா அல்லது லென் சியாவா என்ற புது குழப்பமும் ஏற்பட்டுள்ளது. (க)

# ஆஸி சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் சாய்னா நேவால் சம்பியன்



ஆஸ்திரேலிய சுப்பர் சீரிஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா வின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த இறுதிப் போட்டியில், ஒற்றையர் தரவரிசை பட்டியலில் பதினோறாவது இடத்தில் உள்ள கரோலினா மரீனை சாய்னா எதிர் கொண்டார். தொடக்கம் முதலே சிறப் பாக விளையாடிய சாய்னாவை சமாளிக்க திணறிய கரோலினா 21:18, 21:11 என்ற செட்கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் டெல்லியில் நடந்த இந்தியா ஓபன் கிராண்ட்பிரிக்ஸ் போட்டியில் கிண் ணம் வென்ற சாய்னா தற்போது மீண் டும் கிண்ணத்தை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (க)

## ரோட்ரிக்ஸ் 5 கோல்கள்

கொலம்பியா அணி கால்இறு திக்கு நுழைய காரணமாக இருந் தவர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ். அவரது சிறப்பான ஆட்டத்தால் அந்த அணி தொடர்ந்து முன்னேற்றம் கண்டு ள்ளது. உருகுவே அணிக்கு எதி ரான 2-வது சுற்று ஆட்டத்தில் அவர் 2 கோல்கள் அடித்தார். இதன் மூலம் அவர் இந்தப் போட்டித் தொடரில் 5 கோல்கள் அடித்து முதலிடத்தை பிடித்தார்.

ரோட்ரிகஸ ஏற்கெனவே கிரீஸ், ஐவரிகோஸ்ட், ஜப்பான் அணிக ளுக்கு எதிராக தலா ஒரு கோல்கள் அடி த்து இருந்தார். கொலம்பியா மோதிய ஒவ்வொரு ஆட்டத்திலும் அவர் கோல் அடித்து இருக்கிறார். (க)

## ஐ.நா...

ளது.

அத்துடன், நாட்டின் அபிவிரு த்தி, பொருளாதார நிலை மற்றும் அரசியல் சூழ்நிலை குறித்தும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர் தல் நடத்தப்படவுள்ளதாக ஊகங் கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதால் ஜனாதிபதித் தேர் தல் ஒத்திவைக்கப்படலாம் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. ஆயினும் இது தொடர்பில் அரசாங் கம் எவ்வித முடிவும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நிலத்தில் பயிர் செய்ய...

வெள்ளாங்குளத்தில் கணேசபுரம் என்ற பகுதியில் ஒரு பண்ணை ஒன்றை இராணுவம் எடுத்து நடத்து கின்றது.

1983-ம் ஆண்டு காலப்பகுதி யில் மன்னார் மாவட்டத்தைச் சேர்நத வேலையற்ற இளைஞர் யுவதிகளுக் கென பயிர்ச் செய்கைக்காக தலா இரண்டு ஏக்கர் வீதம் 500 ஏக் கருக்கு மேற்பட்ட காணிகள் அப் போதைய மகாவலி அமைச்சரால் வழங்கப்பட்டன.

ஆனால் அவர்களுக்கு அதற் கான ஆவணங்கள் வழங்கப்பட வில்லை. அக் காலத்தில் இருந்து அவ் இளைஞர் யுவதிகள் அக் காணி யில் பயிர்ச் செய்கை நடவடிக்கை ளில் ஈடுபட்டு வந்தனர்.

1990-ம் ஆண்டு அப்பகுதியில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரண மாக அந்த இளைஞர் யுவதிகள் அப்பகுதியை விட்டு இடம்பெயர்ந்து சென்றனர்.

1990-ம் ஆண்டு தொடக்கம் 2008-ம் ஆண்டு ஜுலை மாதம் வரையில் விடுதலைப் புலிகள் இக்காணிகளில் விவசாய நடவடிக் கைகளைத் தொடர்ந்ததோடு வெள் ளாங்குளம், சேவாக்கிராமம், பாலி யாறு, தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 250ற் கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அங்கு வேலைவாய்ப்பினை வழங்கி ஆண்களுக்கு அக்கால கட்டத்தில் தலா ரூபாய் 600/-ம் பெண்களுக்கு தலா ரூபாய் 500/-ம் ஊதியமாக வழங்கி அங்கு பழ வகைப் பயிர்ச் செய்கை மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்தனர்.

2009-ம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் அரசானது அக்காணி களைக் கையேற்று CIC நிறுவனத் திற்கு வழங்கியது. ஆனால் விரை விலேயே அக்காணி இராணுவக் கட்டுப்பாட்டினுள் ஏற்கப்பட்டது. உள் ளூர் மக்கள் அக்காணிக்குள் தற் பொழுது போக முடியாதுள்ளது. இக் காணிகள் வழங்கப்பட்ட மன்னார் பிரதேச மக்கள் தற்போதும் அப் பிர தேசத்தில் வாழ்ந்து வந்தும் கூட தமக்கு ஆரம்ப காலத்தில் வழங்கப் பட்ட காணிகளை தாம் எடுத்துப் பயிர் செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். இராணுவம் தொடர்ந்து வடமாகாணத்தில் இருந்து வருவ தால் எம் மக்களுக்கு ஏற்பட்டிருக் கும் மற்றுமொரு அவலம் இது.

இதுபற்றி நாம் யாவரும் கரி சனை எடுத்து உரிய நடவடிக்கை கள் எடுக்கக் கடமைப்பட்டுள்ளோம் அல்லவா?

எமது மக்களின் வாழ்வாதாரங் கள் பறிக்கப்பட்டு போரின் பின்னர் அவர்களுக்காக ஆவன செய்திருப்ப தால் எம் மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் மோசமாகி வரு கிறது.

நேற்று (நேற்று முன்தினம்) கிளி நொச்சி பாரதிபுரம் பகுதிக்குச் சென்று மக்களைச்சந்தித்த போது அவர்களின் குறைகள் பலவற்றைக் கூறினார் கள். குடிநீர்ப் பிரச்சினைகள், வீடின்மை, கல்வி சம்பந்தமான பிரச்சினைகள், விவசாயம் பற்றி பிரச்சினைகள், தெருக்கள் போடப்படாமையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் என்று பலதையும் எடுத்துரைத்தார்கள்.

அரசாங்கம் பாரிய செயற்திட் டங்களை நடைமுறைப்படுத்து வதில் எடுக்கும் கரிசனையை போரி னால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாட தேவைகள் சம்பந்த மாகக் காட்டாதிருப்பது மனவருத் தத்தைத் தருகிறது.

வட மாகாண மக்களின் போரின பின்னரான தேவைகள் பற்றிக் கணித்து **Needs Based Assement** என்ற அறிக்கையைத் தருமாறு ஐக கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியிடம கேட்டிருந் தேன்.

எல்லாவற்றையும் என்னுடன் சேர்ந்து கதைத்து விட்டு அரச அமைச்சர் ஒருவருடன் அவர் உடன்பாட்டில் கையெழுத்திட்டுள் ளார்.

இப்பேர்ப்பட்ட விடயங்களில் மக்களால் தேர்தெடுக்கப்பட்டவா

## அரசு தடுத்தாலும்...

பின்லாந்தின் முன்னாள் அதிபர மார்ட்டி அத்திசாரி, நியூசிலாந்தின் முன்னாள் கவர்னர் ஜெனரல் சில் வியா கார்ட்ரைட் மற்றும் பாகிஸ்தான் உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங் கத்தின் முன்னாள் தலைவர் அஸ்மா ஜெஹாங்கிர் ஆகிய மூன்று துறைசார் வல்லுநர்கள் இந்த விசாரணையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எந்தவொரு அரசாங்கமும் விசா ரணையாளர்களுடன் தொடர்புகொள வதை தடுப்பது என்பது மிகவும் சிரம மான விடயமாகத்தான் இருக்கும். அரசாங்கம் எதேச்சாதிகாரத்தை பிரயோகித்து மக்களைத் தடுக்க நினைத்தால், அரசாங்கத்துக்குத் தான் அது பாதகமாக வந்துமுடியும் என்றார அஸ்மா ஜெஹாங்கிர்.

எல்லா தரப்பினரும் புரிந்துள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில தமது விசாரணைக் குழு பக்கச்சார

## பயங்கரவாத...

கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் நாட்டின் பெரிய பிரச்சினையாகும். இதனால் தெற் காசிய நாடுகள் பொருளாதாரத்தை யும் நன்மையையும் இழந்து வரு கின்றன.

ஆனால், இலங்கை பயங்கர வாதத்தை ஒழித்ததால், தற்போது எவ்விதப் பிரச்சினைகளுமின்றி பொருளாதாரத்தில் சிறந்து விளங்கு வதாக அவர் தெரிவித்தார். (எ-11)

களின் அனுசரணையைப் பெறா விட்டால் உண்மை நிலையை அறியாது கணிப்புக்கள் தயாரிக்கப் படும் சாத்தியக் கூறுகள் இருக்கின் றன.

எனினும் இன்று மகிந்தோதய தொழில்நுட்ப பீடத்தின் அடிக்கல் நாட்டுவிழாவிற்கு என்னையும் எங்கள் அமைச்சரையும் அழைத் தமை மன நிறைவைத் தருகின் றது.

பற்ற முறையிலும் சுயாதீனமாகவும வசாரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் தடுத்தாலும் மக்கள் தம்மோடு தொடர்புகொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டுகொள்வார் கள் என்றும் பாகிஸ்தானிய வழக்கறி ஞர் அஸ்மா ஜெஹாங்கிர் கூறினார்.

அரசாங்கங்கள் ஒத்துழைப்பு வழங் காதிருந்த பல சர்வதேச விசாரணை களை இதற்கு முன்னர் தாம் நடத் தியிருப்பதாகவும் விசாரணைக் குழு வல்லுநர் ஜெஹாங்கிர் தெரிவித்தார.

தமக்கு ரகசியமாக தகவல்களை அளிப்போரின்ரகசியத்தன்மை பாதுகாக் கபடும் என்றும் அவர் உறுதியளித்தார.

## இந்திய மீன...

கடந்த 24ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்த 11 இந்திய மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத் தினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கு அமைய யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த மனவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலை யில் முன்னிலைப்படுத்தப்பட்டு விடு தலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த 11 பேரை யும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை வளக்கமறியலில்வைக்க உத்தரவிட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

கிடைக்கும் அனுசரணைகள் யாவும் எங்கள் மாணவச் செல் வங்களின் முன்னேற்றத்திற்கு பயன்புடுத்தப்பட வேண்டும் என் பதே எமது எதிர்பார்ப்பு.

வெகுவிரைவில் இந்தக் கட்டி டம் பூர்த்தி அடைந்து மாணவ மாணவியரின் கல்விக்கு மேம் பாட்டை அளிக்க உதவி புரியும் என்று எதிர்பார்க்கினறேன் என அவர் தெரிவித்தார். (செ-4)

தமது விசாரணைகள் வரும் ஓகஸ்ட் முதல்-இரண்டு வாரங்களில் தொடங்கும் வாய்ப்புள்ளதாகவும் அஸ்மா ஜெஹாங்கிர் கூறினார்.

தமது பரிந்துரைகள் அடங்கிய விசாரணை அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், ஐநா மனித உரிமைகள் பேரவையே அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி முடி வெடுக்கும் என்றும் வழக்கறிஞர் ஜெஹாங்கிர் தெரிவித்தார். (செ-11)

## இரத்மலா...

வில்லை.

அண்மைக்காலமாக முஸ்லிம் கள் மீதும், பள்ளிவாசல்கள் மீதும் தொடரான தாக்குதல்கள் நடந்து வரும் நிலையில் இப்பள்ளி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் முஸ்லிம்களுக்கு எதிரான சம்பவங்கள் அரசாங்கத்தின் அனு சரணையுடன் நடைபெற்று வருகை யில் குற்றவாளிகள் தண்டிக்கப் படாதுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை, இந்தப் பள்ளி[illegible] சல் சம்பவம் குறித்து பொலிஸில் முறையிட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததுடன மோப்பநாய்கள் சகிதம் தேடுதலை யும் அப்பகுதியில் மேற்கொண்ட தாகத் தெரியவருகின்றது. (செ-11)

## கடற்படை...

கடற்படையின் தளபதி அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே நேற்றுடன் ஓய்வுபெற்றுள்ள நிலையிலேயே, புதிய தளபதியாக வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா அப்பதவிக்கு நிய மிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ ஏற்கெனவே பிறப்பித்துள்ளார்.

கடற்படையின் 19-வது த[illegible] யாகப் பொறுப்பேற்கவுள்ள வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா 1978ஆம் ஆண்டு இலங்கை கடற்படையில் இணைந்து கொண்டிருந்தார்.

திருகோணமலை கடற்படைப் பயிற்சி முகாமில் ஆரம்பப் பயிற் சியைப் பெற்ற இவர், இந்தியாவின் கொச்சியில் உள்ள சூட்டுப் பாடசாலை யில் பயிற்சி பெற்றிருந்தார்.

இந்தியாவின் கடற்படை அதி காரிகள் கற்கை நெறியையும் பயின் றுள்ள இவர், பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்திலும் தேசிய பாதுகாப்பு கற்கை நெறியை பயின்றுள்ளார்.

இலங்கை கடற்படைக்கு இந்தியா அன்பளிப்புச் செய்த சயுர என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் மற்றும் அதிவேக பீரங்கிப் படகுகள், தரை யிறங்கு கலம் என்பனவற்றின் கட்டளை அதிகாரியாகப் பணியாற் றிய இவர், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்காற்றி யிருந்தார். (செ-11)

## சர்வதேச விசாரணை...

ரான குற்றங்கள் தொடர்பாக விசாரணை களை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபையினால் சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் மீது சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவுள்ளதை நாம் முழுமனதார வரவேற்கின்றோம்.

போரின் பின்னரான கடந்த ஐந்து வரு டங்களில் இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் பல சந்தர்ப்பங்களை வழங்கியிருந்தது.

ஆனாலும் கூட அதனை சரிவரப் பயன படுத்தாத இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள எந்தவிதமான முயற்சிகளையும் முன் னெடுக்கவில்லை.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து விசாரணைகளைச் செய்தது. ஆனால் அதைக் கூட நடைமுறைப்படுத்த அரசு தயாராக இல்லை.

காலம் தாழ்த்தவும் சர்வதேச சமூ கத்தை ஏமாற்றும் வகையிலும் இவ்வா றான குழுக்களை அமைத்த போதும் அதைக் கூட நடைமுறைப்படுத்த அரசாங கம் தயாராக இல்லை.

சர்வதேச சமூகத்திற்கு வழங்கப் பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வில்லை. யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் ஒருவருடத்தில் மீள் குடியேற்றம் பூர்த்தியாக்கப்படும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடந்து கொள்ள வில்லை.

மீள்குடியேற்றம் இன்னும் வடக்கு கிழக்கில் பூர்த்தியாக்கப்பட வில்லை, யுத்தக்குற்ற விசாரணை கள் செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் வலி.வடக்கு, வலி.கிழக்கு, கிளிநொச்சியில் பர விப்பாஞ்சான், முல்லைத்தீவில் கேப்பாபுலவு, சம்பூரில் மக்கள் மீள் குடியேற்றப்படவில்லை.

அதேவேளை எனிமேல் மீள் குடியேற்றம் இடம் பெறாது என்றும் அரச தரப்பினர் கூறிவருகின்றனர்.

இலங்கை அரசாங்கம் தான் தோன்றித் தனமான செயற்பட்ட தும், நீதியை மறுத்ததுமே சர்வ தேச விசாரணைக்கு முழுக்கார ணம். மேலும் சர்வதேச விசா ரணைக்கு தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு தனது பூரண ஆதரவை வழங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புகள்..
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100 % சித்தியடைந்துள்ளனர்......
ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

IELTS Special Class
செப்ரெம்பர் 06ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு காலை 8.30 தொடக்கம் 11.30 வரை திங்கள் தொடக்கம் வியாழன் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை மாலை 5 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடைபெறும்.
வகுப்புக்கள் ஆரம்பம் 02.07.2014
More Than 10 Years Experience
Extended Speaking practice
We are "IELTS" Registration center fr british Council"
THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINNING PRGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5
(6938)
BRITISH COLLEGE OF ENGLISH
# 192, Navalar Road, Jaffna. Tel: 021 222 0384 / 0778803887

75,000 - 200,000/= வருமானத்துடன்
Switzerland, Singapore, Malaysia
ஹொட்டேல் பயிற்சியும் வேலைவாய்ப்பும்
Diploma – Higher Diploma – Bachelors Degree
வங்கிப்பண வைப்பு, IELTS இல்லை
3 மாதத்தில் பயணமாகலாம்
3 வருட விசா (கல்வித் தகைமை O/L)



பயிற்சி முடிவில் விரும்பிய நாட்டில் தொழிலுடன் குடியுரிமை
வயதெல்லை - 30
மேலதிக விபரங்களுக்கு:
www.sikaram.lk
0777 324 004, 021 222 0011
Sikaram
இல.153, பலாலி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

உடனடி வேலைவாய்ப்பு
எமது அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு O/L, A/L படித்த இளைஞர்கள், யுவதிகள் தேவை!
பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தரவேலைவாய்ப்பும் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்
பயிற்சியின் போது 12000/- பின் 40000/-
வயதெல்லை 18-35
தங்குமிட வசதிகள் உண்டு.



0775506224, 0777981471, 0213203687
(C-7790)

காணி விற்பனைக்கு
உதயசூரியன் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் பரப்பு 2 குளி 2 காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
பொ.மகேந்திரராசா
பலாலி வீதி, ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
(6992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.